270

270
3-53

REGISTERED No. M. 6165. அணா. 2

பத்ஹுல் இஸ்லாம்

FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

ஆகஸ்டு 1953.

8 AUG 1953

விஷயம்.		பக்கம்.
பாஸோவின் மர்மம்	(தொடர் கதை)	1
சிட்டேபறப்பாய் சிறகடித்து	(எம். பி. எம். முஹம்மது காஸீம்)	9
சம்பிய விடுகதைகள்		11
கீர்த்தியின் பேராசை	(அய்யம்பேட்டை எஸ். அப்துர் ரஜாக் ஸாஹிப்)	12
நல்லுபதேசம்	(சிறுவர் பகுதி)	15
மாணவர்களின் நிலை	(மதுரை பீ. ஏ. கபீர்)	17
மாயமாய் மறைந்த மங்கை	(தொடர்கதை)	20
மைசூர் பாக்	(மாதர் பகுதி)	31
விகடத் துண்டுகள்		32

இஸ்லாம் ஆபீஸ்:
20, ஹைரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

JL
Q7ππ2;1, N24F1
N53
187022

பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

வருஷ சந்தா	ரூ.	1–8–0
தனிப் பிரதி	அணா.	2
மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா	ரூ.	2–0–0

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதரூஸ் 5.

மிஃராஜுல் ஆரிபீன் பீ தர்ஜுமத்தி மின்ஹாஜில் ஆபிதீன்.

(புதிய பதிப்பு)

"மிஃராஜுல் ஆரிபீன்" என்பது பதினான்கு இல்முகளுக்கும் ஓர் அலைகடலாகிய நாயகம் இமாம் கஸ்ஸாலி றஹிமதுல்லாஹி அலைஹி அவர்கள் இயற்றியுள்ள ஞானநீதக் களஞ்சியமான 'மின்ஹாஜில் ஆபிதீன்' என்னும் கிரந்தத்திலிருந்து வெகு நுட்பாநுட்பமாக மொழி பெயர்த்ததோர் அரிய சாதனமாகும்; அறிவுக்கு ஆகாரமாம். இதில் அடங்கியிருக்கும் 'மஃரிபா' என்னும் தீட்சை ஞானத்தின் பாகுபாடுகளையும், நேர்வழிக்குரிய சாதனத் தெளிவுகளையும், யோகாப்பியாச முறைகளையும் பற்றி விவரித் தெழுத வேண்டுமானால் எவ்வளவு நீடித் தெழுதினாலும் முடியாது. கோட்டமிட்ட நண்பர்களுக்கே இதன் அருமை விளங்கும். சுத்தத் தமிழ் கலிகோ பைண்டு ரூ. 4–0–0

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதரூஸ் 5.

REGISTRAR OF BOOKS
8 AUG 1953

பத்ஹுல் இஸ்லாம்.

ஆகஸ்டு—1953.

பாஸோவின் மர்மம்.

(தொடர் கதை 8-வது பகுதி)

அத்தியாயம் 24

மேல் மாடியிலுள்ள அறையில் இருட்டில் ஜேன் கட்டப்பட்டு கிடந்தாள். கீழே மூவர் மெதுவாக பேசும் சப்தம் அவளுக்கு கேட்டது. ஆனால் என்ன பேசுகின்றார்களென்று தெரியவில்லை. அவள் டாமைப்பற்றி நினைத்து, டாமுக்கு என்ன அபாயம் நேர்ந்ததோ என்று கவலையுடனிருந்தாள். இவ்வாறிருக்கும் போது தானிருக்கும் மாடியில் தனது அறைக்கு வெளியில் ஏதோ நகரும் சப்தம் கேட்டது. ஆனால் கீழே மூவர் பேசும் சப்தம் நிற்காததால் இது பிரத்யேகமான சப்தமாக தோன்றியது. அவள் திரும்பி அறையின் வாயிலை பார்த்த வண்ணமா யிருந்தாள். அந்த இருட்டில் ஒரு மனிதன் அவ்வறையினுள் வருவது தெரிந்தது. அவன் இவளருகே வந்து நின்று "நான் சொல்வதை கவனித்துக்கேள். நான் சொல்வதைப்போல் நீ செய்ய வேண்டும். நானென்ன செய்கிறேன் என்பதைப்பற்றி யோசனை செய்யாதே, நான் சொல்லுவதுபடி முன்பின் யோசியாமல் செய்ய வேண்டும்" என்றான்.

அவள் ஒத்து தலையை யசைத்தாள்.

"இதன் மர்மம் பின் உனக்கு தெரியும். தற்போது நான் சொல்லுவதை செய்" என்றான்.

இவ்வாறு சொல்லியதும் கீழிருந்து "நான் மேல்போய் அவள் ஒழுங்காக யிருக்கிறாளா வென்று பார்த்து வருகிறேன்" என்னும் ஜான்ஸனின் சப்தம் கேட்டது. இதை யறிந்ததும் அம்மனிதன் மெதுவாக நடந்து அங்குள்ள கதவின் பின்புறம் ஒளிந்து நின்று கொண்டான். அதே நிமிஷத்தில் ஜான்ஸன் வந்தான். "எவ்வாறு யிருக்கிறாய். வாய்கட்டு மூச்சை அடைத்தால் இறந்து விடுவாயே, போலீஸ்

வருவார்களே யானால் நீ பேசவேண்டிய தேற்படும்'' என்று சொல்லி வாய்கட்டு ஒழுங்காக மூச்சை யடைக்காமலிருக்கிறதா வென்று பார்த்து விட்டு திரும்பிச் சென்றான்.

அவன் போனதும் மறைவிலிருந்த மனிதன் வெளிவந்து அவளின் கட்டுகளை அவிழ்த்தான். கைகளால் கால்களை நன்றாக தேய்த்து இரத்தம் ஓட்டம் ஒழுங்கானதும் 'நில்' என்றான்.

அவள் கால்களை நீட்டி கைகளால் தேய்த்துக் கொண்டிருந்தாள். "நான் முன் கதவை தட்டி, அவர்கள் அதைக் கவனிக்கும் போது, பக்கத்து வீட்டு வழியாக இங்கு வந்தேன்'' என்று சொல்லி நின்று கொண்டிருந்தான்.

"அதோ ஏணியிருக்கிறது. அதன் வழியாக ஏறி மேலேயுள்ள கதவை மேல் புறமாக தள்ளி மேலேபோய் அங்கிருந்து கடைசி வீடு வரை ஓடிப்போ. அங்கு பக்கத்து வீட்டை தவிர வேறு எந்த வீட்டி லாவது இறங்கலாம்'' என்றான்.

அவள் எழுந்து நின்றாள். நிற்கமுடியாமல் கீழே விழுந்து மறு படியும் எழுந்தாள்.

"அவர்கள் பிடிப்பதற்குள், நீ ஓடிப்போய்விடு'' என்றான்.

"சரி! நீங்கள் ?'' என்று கேட்டாள்.

"நான் சொல்லியபடி செய்'' என்று சிறிது கோபத்துடன் சொன்னான்.

அவள் ஏணியில் ஏறி மேலேயுள்ள கதவை தள்ளினாள். கால் வழுக்கி ஏணியின் மறுபடியில் கால் நின்றது. அந்த அதிர்ச்சியால் ஏணி இருமுறை ஆடிற்று. அச்சணமே கீழே பேசிக்கொண்டிருந்த சப்தம் நின்றது.

"மேலே ஏதோ சப்தம்! இங்கிருங்கள். நான் பார்த்து வருகிறேன்'' என்று ஜான்ஸன் சொல்லி, மேலே ஓடிவந்தான். அறையை பார்த்தான். படுக்கை காலியாக யிருந்தது, கட்டப்பட்ட கயிறுமாத் திரமிருந்தது, வாயிலடைக்கப்பட்ட வெள்ளை துணியும் கிடந்தது. "அவளைக்காணோம்! ஓடிவிட்டாள்'' என்று சப்தமிட்டான்.

"அவள் ஓடிவிட்டாள். கண்டதும் சுடுங்கள்'' என்று சப்த மிட்டுக்கொண்டு கையில் துப்பாக்கியுடன் ஏணியினருகே ஓடினான். ஏணியில் ஏறி மேல் தளத்திற்கு வந்து பார்த்தான். கொஞ்சதூரத்தில் ஜேன் ஓடுவதைப் பார்த்தான். துப்பாக்கியால் சுட குறி பார்த்தான். அதே சமயத்தில் இருட்டில் இன்னொரு உருவம் ஒரு புகை கூண்டின் பக்கத்திலிருந்து தோன்றியது. ஒரு மனிதனின் உருவம். இவ்வுருவம்

137022

அப்பெண்ணின் உருவத்தை மறைத்துக்கொண்டது. இவ்வாறு எதிர் பாராமல் நடக்கவே சுட தயங்கி பின்பு சுட்டான். அதே சமயத்தில் இருவரும் கீழேவிழுவதுபோல் படுத்துக் கொண்டார்கள். துப்பாக்கி யின் குண்டு, ஒரு புகைக்கூண்டு சுவற்றில்பட்டு கொஞ்சம் சுண்ணும்பு பெயர்ந்தது. உடனே தான் அங்குநின்று கொண்டிருப்பது தவறென் றெண்ணி படுத்துக்கொண்டான். தூரத்தில் தன்னை நோக்கி ஒரு உருவம் வருவதாக தெரிந்தது. உடனே டிக்! டிக்! என்று சப்தம் வந்தது. ஒரு குண்டு ஜான்ஸனின் தோளின் மேல் புறம் போயிற்று. ஒரு குண்டு கையிலிருந்த துப்பாக்கியில் பட்டு, கையைவிட்டு துப் பாக்கி தவறியது. உடனே அவசரமாக வந்த வழியே இறங்கினன். காலில் ஏணி அகப்படாமல் விழுந்தான்.

"என்ன நடந்தது? துப்பாக்கி உபயோகித்த சப்தம் கேட்டதே" என்று பிராடி கீழிருந்து சப்தமிட்டான்.

"ஜன்னல்களை கவனியுங்கள். அவர்கள் இங்கிருக்கிறார்கள்" என்று ஜான்ஸன் சப்தமிட்டான்.

அவரவர்களும் ஜன்னலினருகே ஓடி தயாராகும் சப்தம் கேட்டது. ஜான்ஸன் தட்டித்தடுமாறி கஷ்டத்துடன் எழுந்து நின்றான். யாரோ ஒருவன் தனக்கு பக்கத்தில் நிற்பதாக தெரிந்தது. "போ! கீழே போ! அவர்கள் மேலே இருக்கிறார்கள். நாம் இங்கிருந்து தப்பித்து ஓடவேண்டியது. பின்பக்கம்" என்றான் ஜான்ஸன்.

"நீ உயிருடன் இங்கிருந்து தப்பித்து ஓடமுடியாது. நான் யார் தெரியாதா?" என்றான் அங்கு நின்றவன்.

ஜான்ஸன் ஆடாமல் அசையாமல் நின்று விட்டான். தனது ஜேபியிலிருந்த டார்ச்சை எடுத்து வெளிச்சத்தை எதிர் நிற்பவன் முகத்தில் காட்டினன். "நீ! நீதானு! நீ சாகவில்லையா? நீ சாகவே இல்லை!" என்று திகைத்து உளறினன் ஜான்ஸன்.

"உனது குறி கொஞ்சம் தவறிவிட்டது. நான் செத்துவிட்டே னென்று நீ ஓடிவிட்டாய். அவ்வளவு அவசரப்படலாமா?" என்றான் அம்மனிதன்.

"நீதான் இதெல்லாம் செய்தாயா? நான் யோசித்த தெல்லாம் ஒழுங்காக வரவில்லை. ஒவ்வொன்றுக்கும் இடைஞ்சலேற்பட்டது. ஆனல் நீ செய்வதாக எனக்குத் தெரியாது" என்று கோபத்துடனும் நடுநடுக்கத்துடனும் சொன்னன்.

இச்சமயத்தில் மேலே சப்தம் கேட்கவே, எறிட்டுப் பார்த்தான் ஜான்ஸன். பயத்தில் கையிலிருந்த டார்ச் கீழே விழுந்தது. டார்ச்

கீழே விழும் பொழுது அதன் வெளிச்சத்தில் மேலேயிருந்து பார்ப்பவனின் முகம் தெரிந்தது.

"நிற்கின்ற இடத்தை விட்டு நகராதே! ஜான்ஸன்" என்று ஷம்ஸின் சப்தம் மேலிருந்து வரவே, படிகளின் வழியாக கீழிறங்கி ஓடினான் ஜான்ஸன். அதுவரை சிலைமாதிரி பக்கத்தில் நின்று கொண்டிருந்த மனிதன், திடீரென்று ஓடும் ஜான்ஸனை காலால் தட்டவே படிக்கட்டில் உருண்டு சப்தமிட்டுக் கொண்டு கீழே விழுந்தான் இருட்டில் ஸ்மரணையற்று. இச்சத்தத்தைக் கேட்ட காவல் காத்துவந்த மூவரும் ஓடிவந்தார்கள்.

"நீங்கள் மூவரும் அப்படியே நின்று கையிலுள்ள துப்பாக்கிகளை கீழே போடுங்கள்" என்று ஷம்ஸ் சப்தமிட்டார்.

ஓடிவந்த மூவரும் திகைத்து அப்படியே நின்றார்கள். ஷம்ஸ் மேலே யிருந்தபடியே சுட்டார். பிராடி கையை பிடித்துக் கொண்டே கீழே விழுந்தான். கையிலிருந்த துப்பாக்கி கீழே விழுந்தது.

"நீங்கள் இருவரும்!" என்று ஷம்ஸ் சொல்வதற்குள், துப்பாக்கிகளை கீழே போட்டு நின்றார்கள். ஷம்ஸ் கீழே யிறங்கினார். அறையின் முன் மேரி பயந்து நின்று கொண்டிருந்தாள்.

"நீ ஏன் தனியாக நிற்கின்றாய். இவர்களுடன் சேர்ந்து நில்" என்று சொல்லி துப்பாக்கியைக் காண்பிக்க அவளும் மூவருடன் சேர்ந்து படிக்கட்டின் கீழ் நின்றார்கள்.

"மற்றவர்கள் எங்கே?" என்று பிராடி ஷம்ஸைப் பார்த்துக் கேட்க, "மற்றவர்கள் யாருமில்லை. நான் ஒருவன்தான். ஆனால் போலீஸ் கொஞ்ச நேரத்தில் வருவார்கள்" என்று ஷம்ஸ் இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கும் போது, காலடி சப்தம் கேட்டது. துப்பாக்கி சுடும் சப்தம் கேட்டது, கதவு திறக்கப்பட்டது. இன்ஸ்பெக்டர் பவுட்ஸ் தன் ஆட்களுடனும் சோடோவும் வந்தார்கள்.

அத்தியாயம் 25

அந்த வீடு நிசப்தமாக யிருந்தது. ஒரு அறையில் பாஸோ ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தான். ஷம்ஸ் ஒரு மேஜையினருகே உட்கார்ந்து ஒரு சிகரேட் பற்றவைத்துக் கொண்டு பாஸோவை பார்த்த வண்ணமாக யிருந்தார். சோடேவும் அருகாமையில் சிகரேட் பிடித்துக் கொண்டு நின்றான். இறந்த ஜான்ஸனையும் மற்றவர்களையும் பிடித்துக் கொண்டு போகப்பட்டது.

"நீ டவ்வடன் அல்லா?" என்று ஷம்ஸ் கேட்டார்.

பாஸோ கண்களைத் திறந்து "அத்துடன் பிரவ்னும்" என்றான்.

"உங்களுக்குத்தான் கதை தெரியுமே! என்னைவிட உங்களுக்கு நன்ருகத் தெரியும்" என்ருன் பாஸோ.

"தெரியும்! இருந்த போதிலும் நீ சொல்வது நன்ருக யிருக்கும்" என்ருர் ஷம்ஸ்.

பாஸோ எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்து "நான் டவ்டன் பார்க்குக்கு சொந்தக்காரன். அதிலிருந்து கதை ஆரம்பமாகிறது. என்னுடைய பந்துக்கள் மூவரிருந்தனர். நான் ஆஸ்ட்ரேலியாவிலிருக்கும் போது ஒருவனை சந்தித்தேன். அவன் பெயர் ஜான்ஸன். நான் ஆஸ்ட்ரேலியாவுக்கு சம்பாதிக்கச் சென்றேன். ஏதோ சுமாராக சம்பாதித்துக் கொண்டு என் காலத்தை கடத்தி வந்தேன். ஜான்ஸன் என்னுடனே யிருந்துவந்தான். அவன் தனியாக சாப்பாட்டிற்கே மிக கஷ்டப்பட்டுக் கொண்டிருந்ததனல் என்னுடன் சேர்ந்து யிருந்தான். நான் எங்கு போவதானலும் என்னுடனேயே வருவான். இதற்கிடையில் அவன் என்னுடைய பந்துக்களுள் ஒருவன் என்பதை யறிந்தான். நான் டவ்டன் பார்க்கின் சொந்தக்காரன் என்பதையும் அறிந்தான். இந்த சிறிய டவ்டன் பார்க்கை அவன் பார்க்காததால் பெரிய விலை மதிப்புள்ள சொத்தென்று அவன் நினைத்தான். நான் இறந்தால் அந்த சொத்து அவனைச்சேரும் என்னும் எண்ணம் அவனுக்கு உதித்தது."

"அவ்வாறு தானு?" என்று ஷம்ஸ் கேட்க, "ஆம் எனக்கு தெரிந்தவறை அவனைவிட வேறு நெருங்கிய பந்துக்கள் யாருமில்லை. இச்சொத்தை அடையவேண்டுமென்னும் எண்ணம் தோன்றவே, நாங்களிருவரும் தனியாக ஒரு நாள் ஒரு மைதானத்தில் போகும் பொழுது என்னை சுட்டு, ஒரு பள்ளத்தில் தள்ளிவிட்டு ஓடிவிட்டான். பிறகு தனியாக வசித்து வந்தான். நான் இறந்து விட்டதாக செய்தி பரவியது. உடனே இச்சொத்து விஷயமாக தாவா செய்தான்."

"நீ இறந்து விட்டாயென்று எப்படி செய்தி பரவியது?" என்று ஷம்ஸ் கேட்க, "அதிர்ஷ்ட்ட வசமாக நான் விழுந்த பள்ளத்தின் வழியே கொஞ்ச நேரத்தில் ஒரு டாக்டர் வர நேரிட்டது. அவர் என்னை பார்த்ததும் என்னை, தன் வீட்டுக்கு தூக்கிப் போய் வேண்டிய சிகிச்சைகள் செய்யவே நான் பிழைத்துக் கொண்டேன். ஜான்ஸன் என்னைச் சுட்ட காரணம் என்ன வென்று யோசித்தேன். எதற்கும் நான் இறந்ததைப் போலிருப்பது நலமென்றெண்ணி, டாக்டரிடம் நான் பிழைத்த விபரத்தை யாருக்கும் தெரிவிக்க வேண்டாமென்று கேட்டுக் கொண்டேன். அவர் சம்மதித்தார். பிறகு டவ்டன் பார்க் என்பது ஒரு சிறிய வீடுதானென்றும் பெரிய சொத்தல்லவென்று ஜான்ஸன் கேள்விப்பட்டதும், கேஸை வாபிஸ் வாங்கியபின், நேராக இவ்விடத்தை பார்க்கலாமென் றெண்ணினன். இவ்வெண்ணத்தை

நான் கேள்விபட்டதும் அவன் இங்கு வருவதற்கு 2, 3 வாரங்கள் முன்பே நான் வந்து சேர்ந்தேன்.

"இங்கு வந்ததும் மேரி வீட்டிற்கு போனுயா?" என்று ஷம்ஸ் கேட்க, "ஆம்! மேரி, ஜான்ஸனின் மாற்ருந்தாய். நான் ஒரு வியாபாரியைப்போல் பாசாங்கு செய்து, இங்கு அதிகமாக தங்குவதில்லை."

"இங்கு வந்தபின் உனக்கு பந்துக்களில் இன்னெருவன் மேரி வீட்டில் தங்கியிருப்பது தெரிய வந்ததல்லவா?" என்று ஷம்ஸ் கேட்டார்.

"ஆம்! இவனும் ஜான்ஸனைப்போலவே திருடன். இவர்கள் காணுதென்று இன்னெருவனும் இக்கூட்டத்தில் வந்து சேர்ந்தான் ஸ்டோன்! இவன் மிக தந்திரக்காரன். ஜான்ஸனும் வந்து இக்கூட்டம் எல்லாம் ஓரிடத்தில் சேரவே, இவர்களின் திருட்டு யோசனைகளை யெல்லாமறிய வேண்டுமென்று எண்ணினேன். சுலபமான வழியில் நிறைய பணம் கிடைக்க ஏற்பாடு செய்தனர். அந்த திருட்டுத்தனமான யோசனை மிகப் பிரமாதமானது.

"ஆம்! அவர்கள் யோசனைபடி நடந்தே யிருக்கும். ஸ்டோன் அந்த முட்டாள் மானேஜர் பர்க்லீயைக் கைக்குள் போட்டுக் கொண்டான். அவர்களுக்கு வசதியாக, பட்டாளத்திலிருந்து ஓடி வந்தமைக் கோட்டுக்காக என்கிரேவ் திறமையாக செய்துள்ளான். பிரத்தியேகமாக இரகசியமாக மில்வீட்டின் கீழ் அறையும் கிடைத்தது. இதற்கிடையில் ஒன்று மறியாத டாமும் ஜேனும் மாட்டிக் கொண்டார்கள்" என்ருர் ஷம்ஸ்.

"ஆம்! இவர்கள் யோசனையை முன்பே போலீஸுக்குத் தெரிவித்திருப்பேன். ஸ்டோன் என்னுல் இறக்க நேரிடவே, நான் தெரிவிக்கவில்லை. ஸ்டோன் அவர்கள் ஏற்பாடு செய்தபடி பாங்க்கதவுகளைத் திறந்தான். ஜான்ஸன், அவனது பந்துக்களில் வில்ஸன் என்னும் பெயருடையவனுடனும் இன்னும் வேறு 3 பேர்களுடன் காருடன் தயாராய் கார்த்துக் கொண்டிருந்தான். கார் நிறைய பொய் நோட்டுகள் நிறம்பி யிருந்தது. கார் இவ்வீட்டின் பின்புறம் நின்றது. நான் அவர்களறியாமல் அக்காரை ஓட்டிகொண்டு பாங்குக்கு போனேன்: வீட்டிலிருந்த 5 பேர்களும் வெளியே யிருந்த கார், பொய்நோட்டுகளுடன் காணுமென்று தெரிந்ததும் பயந்துவிட்டார்கள். நான் பாங்கில் ஸ்டோனைச் சந்தித்து மெத்தையின் மேல் புறம் இழுத்துச்சென்றேன். போலீஸ் வரும்வரை அங்கேயே ஸ்டோனை நிற்பாட்டி வைக்கலாமென்று நினைத்தேன். ஆனுல் அவன் பயந்து தானுகவே அந்த இருட்டில் தடுக்கி விழுந்தான். அச்சமத்தில் தலை ஜன்னலில் பலமாக மோதியதால் அப்பொழுதே இறந்தான். நான் அவனைத்தூக்கி பச்சை ஜன்னலில் சாய்த்து வைத்துவிட்டு உடனே மெத்தையிலிருந்து

கீழிறங்கி பாங்க் அலாரத்தை அடித்துவிட்டு நான் வந்த காரையே ஓட்டிச் சென்றேன். அதற்குள் ஜான்ஸனும் அவனைச் சேர்ந்தவர் களும் வேறு ஒரு காரில் பாங்க்குக்கு வரவும், அவர்களின் பொய்நோட் வைக்கப்பட்ட கார் அங்கிருந்து புறப்படுவதைப் பார்த்து அதைப் பின்தொடர்ந்தனர். நான் நேராக டாமின்யிடத்திற்குப் போய் காரை வைக்கோல் போரில் மறைத்து வைத்துவிட்டு, டாமிடம் போனேன். ஜான்ஸன் என்னைத்தேடிக் கொண்டு வரும்பொழுது நான் டாமின் மெத்தை யறைக்குப்போய், உடனே அங்கிருந்த விளக்கை யணைத்து விட்டு, பின்புறமாக அவ்வீட்டை விட்டு அப்பொழுதே கிளம்பி விட் டேன். நான் யாரென்று அவர்களுக்குத் தெரியாது. நான் கிளம்பியபின் வில்ஸன் பின்புறமாக மெத்தை யறைக்குப் போய் தேடிப்பார்த்திருக் கிறான். பின்பு ஜான்ஸனும் பின்புறமாகவே அவ்வறைக்குப்போனான். அவனுக்கு வில்ஸன் தனக்கு முன்பு போயிருப்பது தெரியாது. அங்கு இருட்டில் வில்ஸன் நிற்பதை ஜான்ஸன் பார்த்து, தங்களது காரைத் திருடியவன் என்றெண்ணி கத்தியால் குத்திவிட்டான். வில்ஸன் ஜான்ஸனைவிட வயதால் பெரியவன். எனக்குப் பின்னால் நில விஷய மாக கேஸ் போட்டிருந்தாலும் அச்சொத்து வில்ஸனுக்குத் தான் சேரும். பின்பு அவர்கள் ரோட்டில் கார்த்துக் கொண்டிருந்தார்கள். இதற்கிடையில் டாமும் ஜேனும் அங்கிருந்து காரில் புறப்படுவதை பார்த்தார்கள். தங்களுடைய காரியங்கள் முடிவடைவதற்குள் போலீஸ் இதில் தலையிடாமலிருக்க வேண்டு மென்றெண்ணி, டாம் ஜேன் இருவரையும் வழிமறித்து பிடித்து அடைத்து வைத்தார்கள். நோட் மில் வீட்டில் அச்சடிப்பதை நானே நேரில் பார்த்தால் நல மென்று எண்ணி மில் வீட்டிற்கு போனேன். பின்பு அங்கிருந்து டாம் வீட்டிற்கு திரும்பி வந்தேன். அங்கு யாரையும் காணோம். மாடி அறையில் சோபாவின் மேல் வில்ஸன் இறந்துகிடப்பதைப் பார்த்தேன். அங்கு பக்கத்திலுள்ள ஆற்றில் தண்ணீர் வேகமாக ஓடுவதை நினைத் தேன். அவனைத் தூக்கிக்கொண்டு போய் ஆற்றில் போட்டேன். பின்பு காரிலிருந்து சுத்தம் செய்வதற்குரிய மருந்தை எடுத்து வந்து சோபாவை சுத்தம் செய்தேன். ஏனெனில் டாம் இவ்வாபத்திலகப் படாதிருக்கவும், நானும் இச்சம்பவத்தில் சம்பந்தப்படா திருக்க அவ் வாறு செய்தேன். பிறகு நான் இங்கு வந்து வழமைபடி வசிக் கலானேன்.

"பர்க்லீயை என்ன செய்தாய்?" என்று ஷம்ஸ் கேட்க, "பர்க் லீயா! அவரை இன்னும் கண்டு பிடிக்கவில்லையா? நான் தான் அவரை கட்டி பக்கத்து வீட்டு கீழறையில் விட்டேன். அவர்வாயை மூட வேறு வழியில்லாததால் அவ்வாறு செய்தேன்."

உடனே ஷம்ஸ் எழுந்து வெளியே நின்ற கான்ஸ்டேபிலிடம் சில வார்த்தைகள் சொல்லியபின், பாஸோவென்னும் டவ்டனிடம்

"எனக்கு இன்னும் ஒன்று விளங்கவில்லை. பாங்க் விஷயமாக எனக்கு கடிதம் எழுதியது யார்? ஸ்டோனா?" என்று கேட்டார்.

"அக்கடிதத்தை நான் தான் எழுதினேன். அதற்கு முந்திய நாள் பாங்குக்குப்போய் ஸ்டோனிடம் பேசிக் கொண்டு, பாங்க்கை சுற்றிப்பார்ப்பதாக சொல்லி, அங்குள்ள டைப்ரைடரில் அக்கடிதத்தை டைப் செய்தேன். அங்கே யுள்ள காயிதங்களில் பர்க்லீயின் கை யெழுத்துகளைப் பார்த்தேன். அதைப்போல் கையெழுத்திட்டேன்" என்றான்.

"ஜான்ஸனுக்கு தனது காரியங்களில் இன்னல் விளைவிப்பது யாரென்று தெரியாமல் அவஸ்தைபட்டானல்லவா?" என்று ஷம்ஸ் கேட்க, "அதனாலேயே மைக்கை கத்தியால் குத்தினான். ஜான்ஸன் மைக்தான் தனது காரியங்களைத் தடைசெய்வதாக நினைத்தான்" என்றான் டவ்டன்.

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும் போது, கதவுதட்டும் சப்தம் கேட்டது. ஷம்ஸ் கதவை திறந்து பார்க்க ஒரு குள்ளமான மனிதன் நின்றான். அவனுக்குப்பின்னால் ஒரு கார் நிற்கப்பட்டிருந்தது.

அவன் "இது பிரவ்னின் கார். கொண்டு வருவதற்கு நேரமாகி விட்டது. அவர் போன் செய்யும் போது எனது சம்சாரத்திற்கு உடம்பு சரியாகயில்லை. டாக்டரை கூப்பிட்டு வந்து காண்பித்த பின் இக்காரை ஓட்டிவரலாமென்று பார்க்க, காரின் சக்கரத்தில் காற்றில்லா மல் பன்க்சர் ஆயிருந்தது. அந்த சக்கரத்தை கழட்டி வேறு சக்கரம் போடலாமென்று பின்புறம் திறந்து பார்க்க பின்னால் காகித கட்டுகள் யிருந்தன. அவை அவ்வளவும் பணநோட்டுகள்!" என்றான்.

"நான் காரைப்பார்த்துக் கொள்கிறேன். நீ போகலாம்" என்று ஷம்ஸ் சொல்லி அவனை அனுப்பிவிட்டு உள்ளே வந்தார்.

"டாமும் ஜான்ஸன் இருவரின் ஜாடை பார்வைக்கு ஒரே மாதிரி யாக யிருக்கிறதை கவனித்தீர்களா?" என்று டவ்டன் கேட்க, "டாமும் உனது பந்துக்களில் ஒருவனே! தற்போது உனக்குப் பின்னால் உனது சொத்து வாரிஸ் அவன் தான்" என்றார் ஷம்ஸ்.

"சரி! நான் இறந்த பின் பார்த்துக் கொள்ளலாம்" என்று சொல்லி சிரித்தான் டவ்டன்.

பாஸோவின் மர்மம் முற்றுப் பெற்றது.

சிட்டேபறப்பாய் சிறகடித்து.

(விடத்தல்தீவு. எம். பி. எம். முஹம்மது காஸீம்.)

சிட்டேபறப்பாய் சிறகடித்து
  சிறுமையோடிச் சிதறிடவே
பட்டேபறப்பாய் துவஜமதில்
  பழமைபறந்து புதுமைபுனிதமுற

விட்டேமறையமடமை யென்னும்
  விழலாம் கஞ்சல் பவனப்பூளையென
கிட்டாதெனினும் அருட்கலைகள்
  கிடைக்கும்வழிக்கோர்பாதை செய்வாய். (1)

துஞ்சாதுலகில் இருப்போர்கள்
  துயர்மீள் கல்விகற்றவர்தான்
எஞ்ஞான்று முலகில் அறிஞர்புகழ்
  இழியாது வப்பார் இல்முடையோர்

விஞ்சை விளைத்து வினைகளைந்து
  விர்த்தியளிக்கும் விபுலையெங்கும்
தஞ்ச மென்று கற்றறிந்தோர்
  தமையேமதிப்பார் தாணியுள்ளார் (2)

வானம்பூமி வாழ்க்கைகளை
  வளமாய் யறியவகையுதவும்
தானதரும் செய்விதத்தை
  தவராதளிக்கும் தனக்கல்வி

ஞானயோ காகசியத்தை
  நாளாய் நல்கும் நன்மையுடன்
மோனநிலையில் முத்திக்கும்
  முதலேகல்விமுறை படிப்பீர். (3)

வாழ்வின் சுழற்சிப் போராட்டம்
  வடித்து உரைத்தார் கவிஇக்பால்
தாழ்வின்சிறுமைத்துயர் போக்க
  தந்தார் ஹாலிஆறடிக் கவிதை

பாழும் வினையின் தீமையறப்
பகர்ந்தார் மௌலானுறூமி
நாளும் ஞானக்கல்விதன்னை
நயப்பீர் நபிகள் உரைப்படியே. (4)

அல்லாவென்னும் அட்சரத்தில்
அலிபிலிருக்கும் தனிப்பெருமை
சொல்லால் புகழவொண்ணாத
சுகமேதருருங்கலைக்கேணி

எல்லையில்லாதூறுதற்கு
இல்மேவேண்டும் இஸ்லாமியா
பல்லையிளித்துக்காட்டாமல்
படிப்பீர்கல்வி பயன் பெறவே. (5)

இஸ்வத்து நாச்சியுடைய கிஸ்ஸா.

இது ஷாம் தேசத்திலிருந்த லாபிறென்னும் ஆலிமுடைய மகள் இஸ்வத்து நாச்சியின் சரிதையாகும். இதில் இஸ்வத்து நாச்சியாருக்கும் ஹபீபென்னும் ஒரு பணக்கார வியாபாரிக்கும் நடந்த நிக்காஹும், ஹபீபென்பவர் வெளியூர் சென்றிருக்கும் போது அவருடைய தம்பி இஸ்வத்து நாச்சியாரை கெடுக்க முயற்சித்ததும், இஸ்வத்து நாச்சியார் தன் கற்பை காப்பாற்றுவதில் பட்ட கஷ்டங்களும், பின் தான் ஆண் உருவமேற்றுக் கொண்டு செய்த நற்செயல்களும், கடைசியில் தனது கணவரைச் சேர்ந்ததும், மிகவும் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளன. இதை ஒவ்வொரு முஸ்லிமும், பெண்கள் குறிப்பாகவும் படித்தறிய வேண்டியதவசியம். இதன் விலை அணா. 10

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,
நெ. 20, ஹைறோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

ரம்மிய விடுகதைகள்.

(அய்யம்பேட்டை S. அப்துர் ரஜாக் ஸாஹிப்.)

வினா:— கியாமத் நாள்வரையில் உயிருடன் இருந்து வருபவர்கள் யார்?

விடை:— காஜா கிஸர்- ஹஸ்ரத் இல்யாஸ்- ஹஸ்ரத் ஈஸா- ஹஸ்ரத் இத்ரீஸ் (அலை) அவர்கள்.

வினா:— ஏழை, சீமான், அரசன், பக்கிரி, பெண், பையன், வாலிபர், வயோதிகர், ஸ்திரீ, புருஷர் ஆக எல்லோரையும் வித்தியாசமின்றி அழைத்துச் செல்வது எது?

விடை:— மரணம்.

வினா:— ஆயுள் அதிகரிக்க, அதுவும் அதிகரிக்கிறது? அது யாது?

விடை:— ஆசை.

வினா:— ஸப்ஹு செய்யாமலே புசிக்க ஹலாலா யிருக்கும் ஜந்துக்கள்?

விடை:— மீன், வெட்டுக்கிளி.

வினா:— என்றும் குறையாத பொருள்?

விடை:— உலகாசை.

வினா:— என்றும் தானாக குறையாமலும், அதிகப்படாமலும் இருக்கக்கூடிய பொருள்?

விடை:— ஒருவருக்குரிய ஜீவனாம்சம்.

வினா:— புசித்தல் அளவு பிறருக்குத் தெரியவில்லை. அது எது?

விடை:— தாய் வயிற்றிலுள்ள குழந்தை.

வினா:— வயது ஆக ஆக யௌவன சக்தியை அடையும் ஜந்துக்கள்?

விடை:— மீன், பாம்பு.

வினா:— நுட்பமான குழாய், மயிர் நுழைய இடமில்லை, ஆனால் அதிலிருந்து மனிதர், ஒட்டை, யானை, குதிரை முதற்கொண்டு பருகி பூர்த்தியடைகின்றன. அது யாது?

விடை:— தாயின் பால் காம்பு.

கீர்த்தியின் பேராசை.

(அய்யம்பேட்டை S. அப்துர் ரஜாக் ஸாஹிப்.)

"நானே பெரிய கெட்டிக்காரன், என் புத்தியும் யுக்தியும், வேறு யாருக்கு உண்டு" இந்த செருக்கு பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் போதே ஏற்பட்டிருந்தது கண்ணனுக்கு.

அப்படியும், இப்படியுமாக வித்தியாசாலை பரிக்ஷையில் தேறி சீமைக்குப் போனான். அங்கே மூளை வைத்தியத்தில் தேர்ச்சிபெற்று தன் சொந்த ஊர் கல்கத்தா வந்து சேர்ந்தான்.

"இனி தொழில் நடத்த வேண்டும். உத்தியோகமோ பிடிக்க வில்லை. அது அடிமைத்தனம்" என்றான். தன் ஊரில் பெருங்கீர்த்தி யுடன் வாழவேண்டுமென்று எண்ணி நேர்த்தியானதோர் கட்டிடத் தைக்கட்டி முடித்தான். கட்டிட நேர்த்தி புகழடைந்தது. அவ்வாறே தனக்கும் புகழ்வாயப் பெறும் என்ற நம்பிக்கை அவன் மனதில் குடி கொண்டது. ஆயிரக் கணக்கான துண்டு பிரசுரங்களை வழங்கினான்.

டிஸ்பென்ஸரிக் கெதிரில் அரும்பெரும் ஸைன்போர்டுகளை தொங்க விட்டான். "புதிய டாக்டர்" இன்றியமையாத மூளைசிகிச்சை என்ற விஷயம் பல்வேறு பாஷை பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யப்பட்டது.

விளம்பரத்தை படித்து பலவியாதியஸ்தர்கள் வந்தனர். ஆனால் பீஸைக்கேட்டு பயந்தனர். குறைந்த பீஸ் ரூ. 1000. வைத்தியசாலை ஏற்பட்டு ஆறுமாத காலம் ஆயிற்று. சொந்த செலவிலேயே நடத்தப் பட்டு வருகிறது.

ஒரு நாள் காலை மணி 10, சீமாட்டி யொருவர் மோட்டாரில் வந்து இறங்கினார். அவரது சிறந்த உடைகளைக் கண்டார் டாக்டர். அவரை மரியாதையுடன் வரவேற்றார். சீமாட்டி டாக்டருக்கு எதிரில் உள்ள நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு பின்வருமாறு சம்பாஷித்தார்:—

சீமாட்டி:—டாக்டர் நான் தங்கள் விசேஷக்கீர்த்தி பத்திரிகை வாயலாய் அறிந்து தங்களிடம் வரலானேன்.

டாக்டர்:—வந்தனம், தாங்கள் வந்த காரியத்தை மொழிந்தரு ளுங்கள்.

சீமாட்டி:—டாக்டர்! என்ன சொல்லட்டும்? என் கணவன் கப்பல் வியாபாரி; அவருக்கு அளவுகடந்த சொத்துஉண்டு. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதுபோல் எல்லாம் இருந்தும் தேகாரோக் கியம் இல்லை என்றால் என்னென்று சொல்வது. அதாவது அவருக்கு

புத்தி சுவாதீனமில்லை. தானே ஊருக்கு அதிபதி என்பதாக நேரத்திற்கு கொருவிதமாய் பேசுகிறார். நேற்றிலிருந்து கைப்பெட்டி யொன்றை எடுத்துக் கொண்டு தன்னை ஒரு ரத்தின வியாபாரி எனச் சொல்லி திரிகிறார்.''

''உங்களிடம் ரத்தினங்களை வாங்க ஒரு பிரபு உங்களை யழைக்கிறார்'' எனச்சொல்லி நான் அவரை ஏமாற்றி தங்களிடம் அழைத்து வருகிறேன். தாங்கள் அவரை வெளியிற் செல்லவிடாமல் தடுத்து அவசியமான சிகிச்சையை உடனே ஆரம்பித்து விடுங்கள்.

டாக்டர்:—அம்மா! நீங்கள் கவலைப்படவேண்டாம். நான் உங்கள் கணவன் வியாதியை உங்கள் மூலமாய் தெரிந்து கொண்டேன். என் சிகிச்சையால் அவருக்கு பூரண குணம் ஏற்பட்டுவிடும்.

சீமாட்டி:—உடனே தம் பாக்கெட்டிலிருந்து ரூ. 100 நோட் ஒன்றை எடுத்து டாக்டரிடம் கொடுத்து விட்டு, ஸார்! இதை தாங்கள் அட்வான்ஸாக வைத்துக் கொள்ளுங்கள் நான் போய் என் கணவனை நாளை காலை 12-மணிக்கு எப்படியாவது கொண்டு வந்து சேர்க்கிறேன்.

டாக்டர்:—அம்மா போய் வாருங்கள். நான் நாளை 12-மணிக்கு தங்களை எதிர்ப்பார்த்துக் கொண்டிருப்பேன்.

காலை 11-30 ''போம் போம்'' என்ற சத்தத்துடன் டாக்டர் வீட்டுக்கெதிரில் கார் வந்து நின்றது. நேற்றுவந்த சீமாட்டியே ஒரு சீமானுடன் காரை விட்டிறங்கி டாக்டர் பங்களாவிற்குள் நுழைந்தார்.

டாக்டர் சீமானை அன்புடன் வரவேற்று, கைகுலுக்கி அந்த வியாதியஸ்தரை சற்றுநேரம் உற்று நோக்கி விட்டு தாங்கள் தானு ரத்தின வியாபாரி என்று கேட்க, அவர் ''ஆம் நானே!'' என்றார். இதற்குள் சீமாட்டி அவரைப் பார்த்து, ''அந்த பெட்டியை கொடுங்கள். நான் உள்ளே கொண்டுபோய் கோஷா ஸ்திரிகளுக்கு காண்பிக்கிறேன். எந்த நகை அவர்களுக்குப் பிடிக்கிறதோ அதை உங்களுக்கு வந்து சொல்லுகிறேன்'' என்றார்.

சீமான் பெட்டியைக் கொடுக்கவே சீமாட்டி அதை உள்ளே கொண்டு போவதுபோல் கொண்டுபோய் இரண்டாவது கேட்டிலிருந்தே காரில் ஏறிவிரைவாய் ஓட்டச் செய்து மறைந்தார்.

பின்னர், சுமார் 10 நிமிஷ நேரத்திற்கு டாக்டரும் எழுந்திருந்து சீமானை நோக்கி ''இருங்கள் இதோ வந்தேன்'' என்று சொல்லிவிட்டு சரேலென்று ஹால் கதவை தாளிட்டுக் கொண்டார்.

டாக்டர் கதவை தாளிட்டதும் சீமான் திடுக்கிட்டுப் போய் ''ஸார் ஸார்! என்ன சமாச்சாரம்? பெட்டி எங்கே'' ? என்று அலறிக்கேட்டார்.

டாக்டர் அதற்கு ஒன்றும் பதிலளிக்க வில்லை. "நான் இருந்து என்ன செய்வது? தங்களுக்கு சிகிச்சை செய்ய வேண்டாமா? தாங்கள் கொஞ்சநேரம் தயவு செய்து அசையாதிருங்கள். நான் எலெக்டிரிக் மூலம் முதலில் உங்கள் மூளையை சோதித்துக் கொள்கிறேன்" என்று கூறவே, சீமானுக்கு விசேஷ ஆத்திரம் ஏற்பட்டது. "ஐயா! முதலில் உங்கள் மூளையை சோதியும்" என்று கர்ஜித்தார்.

டாக்டர் அதை பொருட்படுத்தவில்லை. "ஸார் கோபிக்க வேண்டாம். நீங்கள் என்ன செய்தாலும் சரி, ஒன்றும் பலிக்காது. உங்களுக்கு வேண்டிய வசதிகள் பூராவும் உள்ளே யிருக்கின்றன. பசித்தால் அதோ! மேஜைமீது, ரொட்டி, வெண்ணை முதலிய புசிகரணங்கள் தயாராயிருக்கின்றன" என்று சமாதான மொழிகளில் கூறினார். சீமான் கோபத்தை அம்மொழிகள் அதிகரிக்கச் செய்தன. உடனே அங்கிருந்த நாற்காலி மேஜை முதலிய தளவாடங்களை அங்கும் இங்குமாக வீசி எறிந்தார். கதவு ஜன்னல்களை உடைக்கவும் அவைகளை ஆட்டிப் பிடுங்கி எறிந்து வெளிக் கிளம்புவதற்கும் அரும்பாடு பட்டார். எனினும் புதியகட்டிடம் உறுதியான வேலைப்பாடு. என்ன செய்தும் ஒன்றும் சாத்தியப்படவில்லை. கண்பார்வை ஆத்திரத்தை கொண்டிருந்த போதிலும், முகம் சோர்வு அடைந்தது களைத்துப் போனார். ஐயோ என்று தலையைப் பிடித்துக் கொண்டு உடைந்த நாற்காலிமேல் உட்கார்ந்து பெருமூச்சு சொரிந்தார்.

டாக்டர் தம் வியாதியஸ்தரின் செயல்களை அடிக்கடி சன்னல் வழியே கவனித்த வண்ணமாயிருந்தார்.

பொழுது சாய்ந்தது இரவு கழிந்தது. காலை 6-மணி. அன்று வெளியான இங்லீஷ் பத்திரிகை ஒன்று டாக்டர் கைக்கு வந்தது. அதன் முதல் பக்கத்திலேயே "தந்திரக் களவு" என்ற தலையங்கத்தின் கீழ்வுள்ள சமாச்சாரம் டாக்டர் பார்வைக்கு எட்டியது. அதில் "பம்பாயிலுள்ள பிரபல கம்பெனியின் ரத்தின வியாபாரி ஏஜன்ட் மிஸ்டர் வில்ஸன் என்பவரை யாரோ ஒரு மாது ஒரு வீட்டில் சில ரத்தினங்கள் தேவை என்று சொல்லி காலை 10-மணிக்கு அழைத்துச் சென்றார். இப்பொழுது ஒரு பகல், ஒரு இரவு கழிந்துங்கூட ஏஜெண்ட் திரும்பி வரக்காணோம்!" என்று கண்டிருந்தது. அவ்வித சமாச்சாரத்தை படித்ததும் டாக்டர் மனம் கலங்கியது மதிமயங்கியது. சற்று நேரத்திற்குப்பின் நற்சிந்தை அடைந்து விஷயத்தை போலீஸ் அதிகாரிகளுக்கு டெலிபோன் மூலம் அறிவித்தார். உடனே அதிகாரிகள் வந்து விசாரணை நடத்தினர்.

அடுத்த நாட்களில் டாக்டர் கண்ணன் விஷயம் பூராவும் இதர பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டது. இக்கீர்த்தியே அவரது முதல் கீர்த்தியாயிற்று.

நல்லுபதேசம்.

(அய்யம்பேட்டை S. அப்துர் ரஜாக் ஸாஹிப்.)

ஒற்றுமை.

உலகில், ஒற்றுமை மிகச்சிறந்தது. ஒற்றுமையுடன் கூடிய வாழ்க்கையே இன்றியமையாததாகும். உள்ளத்தில் சதா ஒரு விதமான சந்தோஷத்தைக் கொண்டிருக்கும்.

அதற்கு மாறாக சதா சண்டை சச்சரவு செய்துகொண்டு எல்லோரையும் விட்டு தனிப்பட்டிருப்பவன் மனித வர்க்கத்திலேயே சீர்கேட்டை அடைந்தவனாவான். அவன் இருலோகத்திற்கும் தீயன்.

இஸ்லாம், பிளவு கூடாது என்பதுபற்றி பலமாய் கண்டித்துள்ளது. அதன் ஸ்தாபகரான நபிகத்திலகம் (ஸல்) அவர்களின் படிப்பினையிலிருந்தும் போதிய அத்தாக்ஷி கிடைக்கப் பெறுகிறது.

நபிபெருமானார் அவர்களின் விரோதிகள் அவர்களை எவ்வளவோ ஹிம்ஸித்து வந்தார்களாயினும் பெருமானாரவர்கள் பகைவர்களின் விரோதத்தை பொருட்படுத்தாது அவர்களுக்கு எவ்விதத்திலும், நன்மையே செய்து வந்தார்கள். அடியிற்கண்ட சம்பவம் அதற்குச் சான்றாகும்.

ஹஸ்ரத் அவர்கள் காலத்தில் அவர்கள் வரப்போக விருந்த நடப்பாதையில் யூத இடைஞ்சலாளி ஒருவன் முட்களை பரப்பி வந்தான். நபி பெருமான் அவ்விடத்தை அடைந்ததும் அந்த முட்களை யாவும் தம் திருக்கரங்களினால் பொறுக்கி அப்புறப்படுத்திச் செல்வார்கள். இவ்வாறு சிறிது காலம் வரையில் அனுதினமும் நடந்து வருகையில் ஒரு நாள் மட்டும் அத்தகைய முட்களைக் காணோம். அதைக்கண்ட பெருமானவர்கள் விசேஷ திகைப்பும் மனக்கலக்கமு முற்றார்கள். அவர்கள் அத்தோடு இருந்து விட்டார்களா? இல்லை. உடனே அந்த யூதன் வீட்டைத் தேடிச் சென்றார்கள். பெருமானார் அவர்கள் தன் வீட்டிற்கு வந்து விட்டார்கள் என்று தெரிந்தவுடன் யூதன் பயந்து விட்டான். வெட்கம் மற்றொரு புறம் அவனுக்கு ஏற்பட்டது.

அப்போது நபி பெருமானாரவர்கள் அவனிடம் கேட்கிறார்கள்: "அப்பா! நீ சிறிது காலமாக நாள் தவறாது என் நடைப்பாதையில் முட்களை விரித்து வந்தாயே! இன்று ஏன் அப்படிச் செய்யவில்லை. ஒரு கால் உனக்கு சுகக்குறைவு ஏற்பட்டிருக்குமோ வென்று சந்தேகித்து உன்னைப்பார்க்க வந்தேன்."

தீயன் தன் தீமைக்குப் பிரதியாக இந்த நன்மொழிகளைக் கேட்டு பிரமித்து விட்டான். அவன் மன முருகியது; கண்ணீர் சொரிந்தான். உடனே மன்னிப்பு கேட்டு ஈமான் கொண்டான்.

பணிவிடை.

நாம் அல்லா ரஸூலுக்கு கீழ்ப்பட்டு நடக்கிறோம். அடுத்தபடியாக நம் பெற்றோர் தமையன், அக்காள், முதலிய சகல பெரியோர்களுக்கும் கீழ்ப்பட்டு நடக்க கடமைப் பட்டுள்ளோம்.

பெற்றோர் பெரியோர், முதலியவர்கள் நமக்கு ஏதேனும் வேலை செய்யச் சொன்னால் நாம் அதை உடனே உற்சாகத்துடன் செய்து முடித்தல் வேண்டும்.

மூத்தோர் நமக்குச் செய்யும் போதனைகள் யாவும் நம் நன்மை நலவுக்குரியவைகளே. அவர்களின் உத்தரவுகளை நாம் சந்தோஷத்துடன் நாம் நிறைவேற்றிவைக்க வேண்டுமே யல்லாது மனமில்லாத வழியில் செய்தல் கூடாது.

திருக்குர்ஆனில் வல்ல நாயன் திருவுளம் பற்றுகிறான்: "நான் அடியார்களின் பாவங்களை மன்னித்து விட்டபோதிலும், பெற்றோர்களுக்கு கீழ்ப்பட்டு நடக்காதிருப்பவர்களை மன்னிக்க மாட்டேன்." எனவே பெற்றோர்களை சந்தோஷப்படுத்தி வைப்பது அல்லா ரஸூலை சந்தோஷப்படுத்தி வைப்பதுபோலாகும். ஏன் ? அவர்கள் நம்மை அரும்பாடுபட்டு வளர்க்கிறார்கள்.

குறிப்பாக தாயின் பதவி வெகு மேம்பாடானது. பெற்றோர்களுக்கு கீழ்ப்பட்டு நடவாதவன் பேரில் அவன் இறப்பதற்கு முன்னரும் ஆண்டவன் அவனை பலவித வேதனைக்குட் படுத்திவிடுகிறான்.

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) தம் அருமைப் புதல்வரான ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களை குர்பானி செய்ய உடன் பட்டார்கள், என்றால் கீழ்ப்படிதலின் தாத்பரியம் இதிலிருந்தும் நன்கு வெளியாகிறது.

நாயன் கீழ்ப்படிதலின் எண்ணத்தை நம் எல்லோருக்கும் தந்தருள்வானாக! ஆமீன்.

மாணவர்களின் நிலே.

(மதுரை. B. A. கபீர்.)

கல்லூரியில் கல்வி கற்கும் மாணவன், தன் எதிர் காலம் சிறந்து விளங்கவேண்டும் என்று நினைக்கிருன். தன் வாழ்க்கை, உலகினர் அனைவர்க்கும் ஓர் எடுத்துக் காட்டாக விருக்கவேண்டும் என்று யூகிக்கிருன். சிறப்புமிக்க உயர்ந்த பதவியிலமைய வேண்டும் என்று விரும்புகிருன். வேருெருவன், ஆயிரக்கணக்கான மக்களுக்கு ஓர் பெரும் தலைவனுக உயரவேண்டும் என்று கணக்கிடுகிருன்.

கல்லூரிப்படிப்பு முடிந்ததும் பரீக்ஷையில் தேறிய மாணவன் ஏதும் வேலைக்காக முயலுகிருன். அறிமுகம் தெரியாத கனவான்களையெல்லாம் அணுகி, ஒரு வேலைக்காக சிபாரிஷ் செய்யும்படி வேண்டுகிருன். அக்கனவானின் இனிய மொழிகள், வேலைக்காகத் தவிக்கும் மாணவனின் உள்ளத்தை ஆறுதல் அளிக்கிறது.

கல்லூரியில் படிக்கும்போது உணராத மாணவனின் உள்ளம் வேலைத்தேடும் போது விரிந்து கொடுக்கிறது. தந்தையின் பணத்தையெல்லாம் வீணுக வாரி இறைத்தோமே என்று அப்போதுதான் உணரச் செய்கிறது. தனக்காக தன் பெற்ருேர் என்ன பாடுபட்டார்கள் யென்பதை நினைவூட்டுகிறது. ஒரு நூறு ரூபாய் சம்பளத்தில் வேலை கிடைத்தாலும் போதும் என்று சிலர் நினைக்கிருர்கள். ஒரு கடையிலாவது வேலைக்கமரலாம் என்று சிலர் நினைக்கிருர்கள். சாப்பாடுபோக ஏதும் பத்து ரூபாயாவது கிடைத்தால் போதுமானது என்று நினைப்பருமுண்டு. பெற்ருேரை; கஷ்டத்தின் மிகுதியால் நிந்திப்பதுமுண்டு. வாழ்க்கையில் வெறுப்பு உண்டாகி "என்ன வாழ்க்கை, என்ன உலகம், ஏன் பிறந்தோம்" என்ற வசனங்கள் தானுக உள்ளத்தின் ஆழத்திலிருந்து குரல் எழுகிறது. ஆண்டவனை ஏசும் படலமும் ஆரம்பிக்கிறது. ஆட்சி நடத்தும் தலைவர்களை குறைகூறும் படலமும் ஆரம்பமாகிறது. தான் கவர்ன ஜெனரலாக விருந்தால் வேலையில்லாத் திண்டாட்டம் ஒருபோதும் வராமல் தடுத்து விடுவேன் என்று கூறுவார்கள். தான் மந்திரியாக வந்துவிட்டால் பஞ்சம் என்பதே நீக்கிவிடுவேன் என்று பறைசாற்றுவார்கள். ஏழைகளுக்கும், பணக்காரர்களுக்கும் ஒருவித வித்தியாச மின்றி நடத்தும் சக்தி இருக்கிறது என்று தன் நண்பர்களிடம் ஜம்பம் பேசுவார்கள்.

இத்தனை குதூகலங்கள், கல்லூரியை விட்டு வெளிவந்த மானவர்கள் செய்தும், பிரதிதினமும் சினிமாக் கொட்டகைகளில் ஆஜர் ஆவதை அவர்களாலேயே தடுக்கவியலாது; சீட்டாட்டங்களில் இவர்களை

ஜெயிக்க முடியாது, சிகரேட் பிடிப்பதில் பலவகை! சைக்கிள் ஏறுவதில், சர்க்கஸ் கம்பெனியில்கூட பார்த்திருக்க முடியாது. சம்பாஷணைகள், இழிவு வார்த்தைகளைக் கலக்காமல் பேசமுடியாது. நினைப்புகள், அமெரிக்கா லண்டன் பார்லிமெண்டில் தான்! கண்டகனவுகளை நினைவாக்க முடியாமல் அங்கள் எண்ணங்கள் அனைத்தும் பலூன்மாதிரி உடைகின்றனவே என்று ஏங்குவார்கள்.

மனதில் கட்டிய கோட்டைகள், அறியாமை எதிர்ப்புகளால் தகர்க்கப்படுகின்றன. மனதில் உதித்த கட்டடங்கள், வறுமையால் சரிந்து உடைகின்றன. வெற்றி கிடைத்து விடும்யென்று திண்ணமாக நினைத்துக் கொண்டிருக்கும்போது வெற்றியின் அறிகுறியில்லாமலே போய்விடுகிறது. நினைத்தது பலித்துவிட்டது என்று ஊர்ஜிதமாக எண்ணிக் கொண்டிருக்கும்போது நீர்குமிழ்போல் மறைந்து விடுகிறது. முடியாது என்ற வார்த்தை, நெப்போலியனின் அகராதியில் மட்டுமா இல்லாது போயிற்று என்று தவிக்கும் நிலை வந்து விடுகிறது. இத்தகைக் கஷ்டங்கள், கற்ற மாணவனின் சக்தியில் தளர்ச்சி யுண்டாக்கி விடுகிறது. இத்தகை இன்னல்கள், படித்த மாணவனின் ஊக்கத்தை நெகிழச்செய்து விடுகிறது. இத்தகை இடையூறுகள் பட்டம்பெற்ற மாணவனின் உள்ளத்தைத் தவிடுபொடியாக்கிவிடுகிறது. ஒரு காலத்தில் ராஜீய உள்ளம் படைத்திருந்த மாணவனின் நிலை எப்படி மாறிற்று என்று நினைக்க வியப்பூட்டுகிறது. மாணவனாக யிருக்கும் காலத்தில் டாம்பீக முறையில் நடமாடிய காலச்சக்கரம் மாறி, நடைபிணமாக நடக்கொழுகும் நிலை எப்படி மாறிற்று என்று நினைக்க ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. இவர்களுக்கு, என்றுதான் விமோசனம் உண்டாகுமோ தெரியவில்லை.

ஔரங்கஸீப்

இது டில்லி மன்னர் ஷாஜஹான் சக்ரவர்த்தியின் புத்திரசிகா மணியாகிய ஔரங்கஸீபின் சரித்திர வரலாறு. இவர் நமது இந்தியா அரசாரானபடியால் இவருடைய சரிதையை ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டியது அவசியம்.

இதன் விலை ரூ. 1-9-0

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

தாரீகுல் குலபா.

இஸ்லாமிய கலீபாக்களின் அரசாங்க சரித்திரங்கள்.

நமது இஸ்லாமிய கலீபாக்களின் சரித்திர விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியது எல்லா முஸ்லிம்களுக்கும் அத்தியாவசியமான கடமையாகும். ஏனெனில் இச்சரித்திரங் களில் இஸ்லாமின் ஆரம்பமும் இஸ்லாத்தை நிலைநாட்டிய தத் துவங்களும் இஸ்லாத்தின் பக்தி விசுவாசங்களும் இஸ்லாத் தின் சமத்துவங்களும் இஸ்லாத்தின் நீதி பரிபாலனங்களும், ஒருங்கே நிறைந்திருக்கின்றன. ஆதலின், இம்மகிமை பொருந் திய சரித்திரங்களை ஒவ்வொரு முஸ்லிமும் முஸ்லிம் அல்லா தாரும் அவசியம் வாசிக்க வேண்டும்.

இதில் முதற்பாகமாக நம்நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சரித்திரமும், முதல் கலீபா வாகிய ஹஸரத் அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரமும் அடங்கியது. கிளேஸ் காகிதத்தில் கிரௌன் 16-பேஜ் சைஸில் அச்சிடப்பட்டு பைண்டு கட் டியது. இதன் விலை ரூ. 1 8 0

ஷை இரண்டாவது பாகம்: இதில் ஹஜ்ரத் உமர் றலியல் லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரம் விரிவாய் எழுதப் பெற்றது. இதன் விலை ரூ. 1 4 0

ஷை மூன்றும் பாகம்: இது ஹஜ்ரத் உஸ்மான் (றலி) அவர்களின் கிலாபத்தும், ஹஜரத் அலி (றலி) அவர்களின் கிலாபத்தும், ஹஸரத் இமாம் ஹஸன் (றலி) அவர்களின் கிலா பத்தும் பனி உமையாவின் கிலாபத்தும், அப்துல் மலிக் அவர் களின் கிலாபத்தும் ஆக 5-கிலாபத்து ஆட்சி வரலாறுகள் அடங்கியது. இதன் விலை ரூ. 1 4 0

ஷை மூன்று பாகம் சேர்ந்தது ரூ. 3 8 0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

மாயமாய்

மறைந்த மங்கை.

(தொடர் கதை 1-வது பகுதி)

1-வது அத்தியாயம்

லன்டன் ரோஸன் பிளாம் கம்பெனியில் டைப்படிக்கும் வேலை செய்துவரும் சுமார் 20 வயதுள்ள அழகிய ஒலிவா மில்பர்ன் என்பவளின் மனம் குழப்பமாக யிருந்தது. அவள் போக்ஸ்டோன் ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்தாள். மழை தூரல் போட்ட வண்ணமாக யிருந்தது. எங்கும் இருள்! நிலா கிடையாது. தன் கைகடியாரத்தில் மணியைப் பார்த்தாள். $11\frac{1}{2}$.

அவள் இரு வாரங்கள் லீவ் எடுத்துக் கொண்டு ஓய்வுக்காக எங்காவது போய் வரவேண்டுமென்று நினைத்ததிலிருந்து, அவளுக்கு எதுவும் காரியம் ஒழுங்காக வரவில்லை. எல்லா விஷயங்களிலும் அவசகுணம் தடங்கல் ஏற்பட்டவண்ணமா யிருந்தது. ஆபீஸிலிருந்து பிறப்பட லேட்டாகி விட்டது. சாரிங்கிராஸ் ஸ்டேஷனுக்கு வந்து $7\frac{1}{4}$ மணி டிரெயினைப் பிடித்தும், வழியில் இன்ஜின் தொந்தரவால் டிரெயின் $1\frac{1}{2}$ மணி நேரம் நின்றுவிட்டது. பின்பு போக்ஸ்டோன் ஸ்டேஷன் வந்ததும், டிரெயின் பிந்திவந்ததால், ஸ்டேஷனில் டாக்ஸி கார்களைக் காணோம். ஒரே ஒரு கார் இருந்ததையும் இன்னொரு பிரயாணி தனது மனைவியுடன் வாடகைக்கு அமர்த்தி கிளம்பி விட்டார்.

தனக்கு நேர்ந்தவைகளை யெல்லாம் நினைத்து வருத்த முற்றதுடன் தனக்குத்தானே ஒரு வரட்டுச் சிரிப்பு சிறித்தாள். தற்போது நடப்பதே தவிர வேறு வழியில்லையென்று தீர்மானித்து, தனது மழைக் கோட்டை அணிந்து கொண்டு தலையிலும் மழை தொப்பியை போட்டுக்கொண்டு கையில் பெட்டியை தூக்கிகொண்டு ஹார்பர் பக்கமாக நடையைக் கட்டினாள். எங்கும் நிசப்தமாக யிருந்தது. ஜனநடமாட்டமே யில்லை. அது கடற்கரை யோரத்திலுள்ள ஒரு கிராம மாதலால் குளிர்ந்த கடற்காற்று வெகு வேகமாக அடித்துக் கொண்டிருந்தது. மழையும் அதிகமாகிவிட்டது. குளிர் கொடுமையினால் நடக்கவும் முடியவில்லை. அவள் ஸன்கோர்ட் டெர்ரஸ் என்னுமிடத்திற்கு போக வேண்டும். இதற்கு சில வருடங்களுக்கு முன் இந்த போக் ஸ்டோன் கிராமத்திற்கு அவள் வந்திருந்தும் ஸன்கோர்ட் டெர்ரஸ் எங்கிருக்கிறதென்று சரியாக ஞாபகமில்லை. ஸ்டேஷனுக் கருகாமையில் வரும் போது ஒரு போலீஸ் கான்ஸ்டிபேளைப் பார்த்திருந்தாள். அவனை

யாவது இடத்தைப்பற்றி கேட்டோ மில்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டு, வேகமாக அடிக்கும் குளிர்ந்த காற்றை எதிர்நோக்கி நடந்தாள்.

ஒரு தெருவின் ஓரத்தில் ஒருபோர்ட் நாட்டப்பட்டிருந்தது. அதில் "ஸன்கோர்ட் டெர்ரஸ்" என்று போடப்பட்டிருந்தது. "அப்பாடி! இனி 6-வது நம்பர் வீட்டைக் கவனிக்க வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே நடந்தாள். அவ்வீட்டையும் கண்டாள். ஆனால் வீட்டினுள் ஒரு ஜன்னலிலாவது வெளிச்சம் தெரியவில்லை. இருட்டாக யிருந்தது. "நம்மை மறந்து விட்டார்களா?" என்று நினைத்துக் கொண்டே முன்னாலிருந்த வாயல்படிகளில் ஏறி, வாயற்கதவண்டை வந்தாள். கதவைத் தட்டலாமென்று கையை ஓங்கினாள். அதற்குள் தனக்குள் ஏதோ பயம் தென்பட்டது. "திரும்பி வேறெங்கேயாவது போய் வேறு வீடு பார்த்துக்கொள்ளலாமா?" என்று நினைத்தாள். பின்பு "எங்கும் இருட்டாய் இருக்கிறது. இதற்காகவா பயப்படுவது" என்று தனக்குத்தானே தைரியம் சொல்லிக் கொண்டு கதவை ஓங்கி தட்டினாள். தான் தட்டிய சப்தமும், வேகமாக அடிக்கும் காற்றின் சப்தமும் தவிர வேறு வீட்டினுள் ஒரு சப்தத்தையும் காணோம். மறு முறையும் தட்டினாள். கொஞ்ச நேரத்திற்குப்பின் வீட்டிற்குள் காலடி சப்தம் கேட்டது. விளக்கு வெளிச்சமும் தெரிந்தது. கதவைத் திறந்து கொண்டு ஒரு பெண் வந்தாள். வெளியில் நிற்பவளைப் பார்த்து ஆச்சரியத்துடன் "என்ன விஷயம்" என்றாள். "நான் இவ்வீட்டில் தங்க ஏற்பாடு செய்தவள், ஆனால் டிரெயின் தொந்தரவால் வர பிந்திவிட்டது. உனது தூக்கத்தையும் கெடுக்க வேண்டிய தேற்பட்டது" என்று பதிலளித்தாள்.

"நீ வருவதாக தெரியாதே."

"இவ்வீட்டிற்கு சொந்தக்காரி மேரியாதானே. அவளுக்குத் தெரியுமே."

"இதுதான் மேரியா வீடு. ஆனால் நீ வரும் விஷயம் எனக்குத் தெரிவிக்க வில்லையே?"

இதற்கிடையில் ஒலிவா வெளியே குளிர் வாடையில் நிற்பதால் கைகால் நடுக்கமுறவே, வெளியில் நின்று கொண்டு வேலைக்காரியினிடம் தர்க்கம் செய்வது சரியல்லவென்று வீட்டினுள் நுழைந்தாள்.

"நீ மேரியாவினிடம் நான் வந்திருப்பதாக தெரிவி. இங்கு ரூம் காலியாக யிருப்பதாக பேப்பரில் விளம்பரத்தைப் பார்த்து கடிதம் எழுதியிருந்தேன். அதற்கு 6ந் தேதி ரூம் தயாராக யிருக்குமென்று பதிலும் வந்தது. இதோ பார்" என்று சொல்லி தன் கையில் தொங்கிக்கொண்டிருந்த பையிலிருந்த ஒரு கடிதத்தையும் எடுத்துக் காண்பித்தாள். அதைப் பார்த்தபின் "நல்லது, தற்போது மேரியா தூங்க

தன் அறைக்கு போய் விட்டதால், நான் ரிஜிஸ்டர் நோட் புஸ்தகத்தில் உனது பெயர் பதிவு செய்திருக்கிறதா வென்று பார்த்து வருகிறேன். நீ இங்கேயே இரும்" என்று சொல்லி அந்த ஹாலின் பக்கத்திலுள்ள ஒரு கதவை திறந்து விளக்கை ஏற்றி காண்பித்தாள். ஒலிவா அங்கு பார்க்க அது ஒரு சிறிய அறையாகத் தோன்றியது. அதிலுள்ள நாற்காலிகளும் சோபாவும் மிகவும் பழையதாகவும் யிருந்தது. சுவற்றில் ஒரு கடியாரமும், ஒரு பெண்ணின் பழைய போடோவும் தொங்கிக் கொண்டிருந்தன. போடோவைப் பார்த்து, மேரியா வயது முதிர்ந்தவளாகத்தான் தெரிகிறது என்று நினைத்தாள். இதற்கிடையில் வேலைக்காரி இவ்வறையின் கதவை நெறுக்கி விட்டுச் சென்றுள்.

அவள் மெத்தைபடியில் ஏறும் சப்தம் கேட்டது. பின்பு அந்த சப்தமும் நின்றது. தற்போது கடியாரம் சப்தம் டக்டக் என்று கேட்டதே தவிர மற்றபடி நிசப்தமாக யிருந்தது. அவ்வீட்டின் கதவை தட்டுவதற்கு முன் தனக்கு வந்த பயம் தற்போது மீண்டும் வந்தது. கொஞ்ச நேரம் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தாள். பிறகு எழுந்தாள். "இந்த வீட்டை பார்க்கவே பயமாக யிருக்கிறது. வேறு எங்காவது ஹோட்டலிற்கு போய் தங்கலாமா?" என்று தனக்குதானே யோசித்தாள். "சீ! இது என்ன யோசனை! இவ்வீட்டைப் பற்றி தினசரி பத்திரிகைகளில் விளம்பரம் செய்கிறார்கள். கடற்கரை யோரத்தில் யிருப்பதால் எவ்வளவோ ஜனங்கள் வந்து தங்கி போவார்கள். இவ்வீட்டைப் பற்றி என் பயப்பட வேண்டும்?" என்று தனக்குள்ளேயே தைரியம் சொல்லிக் கொண்டாள். என்ன மனதைத் தைரியப்படுத்தியும் அவளுக்கு பிடித்த பயம் விடவில்லை. இவ்வீட்டிலிருப்பது ஏதோ அபாயத்தில் மாட்டிக்கொண்டதுபோல் தோன்றியது. "ஓடிப்போ! திரும்பாதே" என்று தன் மனது சொல்லிக்கொண்டிருந்தது. கடிகார சப்தமும் "டிக் டிக் டிக் டிக் ஓடிப்போ திரும்பாதே" என்று சொல்லுவதுபோல் யிருந்தது. தன்னை யாரோ கவனித்துக் கொண்டிருப்பதாகவும் தான் நினைத்தாள். உடனே அறையைச் சுற்றிப்பார்த்தாள், வேறு வழியாக யாரும் அறையினுள் வந்திருக்கிறார்களா வென்று. யாருமில்லை. தனது கெட்ட நினைவுதான் காரணம் என்றிருந்தாள். ஆனால் அவள் நினைத்தது ஒருவகையில் சரியே. அவள் பின்னால் சுவற்றில் தொங்கவிடப்பட்டிருந்த போட்டோ சப்தமிடாமல் நகர்ந்தது. மிகவும் கெட்ட பயங்கர விழிகளுடைய இரு கண்கள் அவளை நோட்டமிட்டன. பின்பு போட்டோ நகர்ந்து முன் யிருந்த யிடத்தில் அமர்ந்தது.

"ஆ! ஏதோ காலடிசப்தம்! வேலைக்காரி திரும்பிவருகிறாள்" என்று நினைத்து தைரியமானாள். வேலைக்காரிதான் திரும்பிவந்தாள். அவளைப் பார்க்க அவள் சாதாரண வேலைக்காரியாகவே தோன்றியது. அவளைப் பார்த்ததும் தான் நினைத்த கெட்ட எண்ணங்களெல்லாம் மாறின.

"ஏதோ தவறுதல் ஏற்பட்டுவிட்டது. உனது பெயர் ரிஜிஸ்டரில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் 16உ வருவதாக போடப்பட்டிருக்கிறது 6உ அல்ல" என்றாள் வேலைக்காரி.

"இருந்தாலும் தற்போது நான் தங்க ஏதாவது ஒரு இடம் வசதி செய்ய முடியாதா?" என்று சிரித்த முகத்துடன் கேட்டாள் ஒலிவா.

"அப்படியானால் பக்கத்து வீட்டில்தான் ஏற்பாடு செய்ய முடியும். இந்த இரண்டு வீடுகளும் டேரியாவுக்கு சொந்தம். இரு வீடுகளுக்கும் வழி உண்டு. வழமைபாக தங்கவருபவர்களை பக்கத்து வீட்டில் வைப்பது வழக்கம். அவ்வீட்டில் ஒரு ரூம் இருக்கிறது. அங்கு தங்கலாம். ஏதாவது சாப்பிடுவதற்கு வேண்டுமா?" என்று கேட்டாள்.

"எனது கைகளை அலம்பிவிட்டு படுத்தால் போதும். தற்போது வேறொன்றும் வேண்டாம்"

"வாருங்கள் உனது அறையையும், தண்ணீரிருக்கும் அறையையும் காண்பிக்கிறேன்" என்று அழைத்து ஹாலுக்கு வந்து அங்குள்ள ஒரு மெழுகுவத்தியை கொளுத்தி கையில் எடுத்துக்கொண்டு இன்னொரு கதவை திறந்து, ஒலிவாவை பின்தொடருமாறு சொல்லிச் சென்றாள். ஒலிவா பின் சென்றாள். அங்கிருந்து இன்னொரு ஹாலுக்கு போனார்கள். அதைப்பார்த்ததும். "இது பக்கத்து வீட்டு ஹால்" என்று நினைத்தாள். அங்குள்ள ஒரு படிக்கட்டு வழியாக கூப்பிட்டுச் சென்று அங்குள்ள விளக்குகளை ஏற்றி தண்ணீருள்ள அறையும், படுக்கும் அறையும் காண்பித்து, "காலையில் டீ எடுத்து வருகிறேன்" என்று சொல்லிச் சென்றாள் வேலைக்காரி. ஒலிவா கையிலிருந்த கிளவ்ஸை கழட்டி கையைக் கழுவி விட்டு தனது அறைக்குச்சென்று கதவை மூடினாள். இந்த வீட்டிலும் நிசப்தமே தாண்டவமாடியது. இருந்தாலும் மனதை தைரியப்படுத்திக்கொண்டு கட்டிலில் உட்கார்ந்தாள். காலிலுள்ள பூட்ஸுகளை கழட்டினாள், மழைகோட்டையும் தொப்பியையும் கழட்டி வைத்தாள். தற்செயலாக தனது கையிலுள்ள மோதிரத்தைக்கவனித்தாள். அதில் ஒரு வைரக்கல் குறைவாகயிருந்தது. உடனே பிரமித்து எழுந்தாள். கையைக் கழுவும்போது மோதிரத்தை கழட்டி கழுகினாள். அப்போது எல்லா வைரக்கற்களும் ஒழுங்காக யிருந்தன. தற்போது ஒன்றைக் காணோம். அந்த ஸ்நான அறையில் விழுந்திருக்கக்கூடு மென்று நினைத்தாள். அவ்வறையைவிட்டு வெளியில் வராண்டாவுக்கு வந்தாள். இருட்டாகயிருந்தது. காலில் பூட்ஸ்யில்லாமலேயே நடந்து ஸ்நான அறையைக் கண்டுபிடித்தாள்.

அங்கு விளக்கின் ஸ்விட்ச் எங்கிருக்கிற தென்று இருட்டில் சுவற்றைத் தடவிக் கொண்டிருக்கும்போது, ஏதோ மெதுவாக ஒரு சப்தம் கேட்டாள். உடனே பழைய பயம் எல்லாம் சேர்ந்து

வந்தது. யாரோ படிகளின் வழியாக மெத்தைக்கு மெதுவாக வருவதுபோல் தோன்றியது. யார்? எதற்காக மெதுவாக நடந்து வருகிறார்கள்? என்று யோசித்தாள். பயத்தால் ஹிருதயம் படபட வென்றடித்தது. ஸ்நான அறையிலிருந்து படிபக்கம் நோக்கினாள். ஏதோ மனித உருவம் மெத்தைக்கு தனது அறைபக்கம் சென்றமாதிரி தெரிந்தது. இவள் இருட்டிலேயே சப்தமிடாமல் நின்றாள். கொஞ்சமும் நகரவில்லை. வந்த மனிதன் அவள் அறையின் கதவினிடம் கொஞ்ச நேரம் நின்றபின், மெதுவாக சப்தமிடாமல் வந்த வழியே திரும்பி படிகட்டின் வழியாக இறங்கினான். எதற்காகவந்து தனது அறைவரையில்போய் திரும்புகிறான்? யோசித்தாள். தான் தனது அறையில் இருப்பதாக நினைத்து தன் அறையின் கதவை வெளிப்பக்கம் பூட்டிவிட்டு போயிருக்கலாம் என்று நினைத்தாள். எதற்காக இவ் வீட்டில் தங்கவந்தவளை ஒரு கைதியைப்போல் அடைத்துவைக்க வேண்டும்? ஒன்றும் விளங்கவில்லையே என்று சிந்தித்தாள்.

அப்போது கீழே ஹாலில் ஏதோ பேசும் சப்தம் கேட்டது. பயம் ஒருபுறமிருக்க கீழே என்ன நடக்கிறதென்று பார்க்க ஆவலானாள். மெதுவாக சப்த மிடாமல் நடந்து படிக்கட்டுவரை வந்து கீழே நோக்கினாள். தெருவு கதவு திறக்கப்பட்டிருந்தது. ஆனால் ஹாலில் விளக்கில்லாததால் ஒன்றும் தென்படவில்லை. திடீரென்று தெருவுகதவு மூடப்பட்டது. விளக்கு போடப்பட்டது வெளிச்சத்தில் ஹாலைப் பார்த்ததும் ஸ்தம்பித்து நின்றாள். கீழே 4, 5 பேர்கள் இருந்தார்கள். அதில் இருவர் ஒருவனை கையில் தூக்கிவைத்திருக்க பார்த்தாள். அவனுடைய நெற்றியின் ஒருஓரத்திலும் மயிர்களிலும் இரத்தம் வடிவது போல் தோன்றியது. அது ஒரு கொலையுண்ட பிணம்! தன்னை அறியாமல் சப்தமிட்டு அலறினாள். உடனே கீழேயுள்ளவர்கள் சப்தம் வந்த திசையை நோக்கினார்கள். அவர்களுள் ஒருவன் “ அந்த பெண்! முட்டாளே! அவள் அறையை மூடவில்லையா ? ஓடு ! அவள் வாயை மூடு ” என்று கர்ஜித்தான். ஒலிவா அப்படியே நின்றாள். ஓடலா மென்றால் கால் உதவவில்லை. இதற்கிடையில் கீழிருந்தவர்க ளெல்லாம் மேலே ஓடிவந்தார்கள். அவர்கள் அருகே வந்ததும் தன்னை அறியாமல் தனது அறையை நோக்கிஓடினாள். அதற்குள் தனது கையை ஒருவன் பிடித்தான். சப்தமிடுவதற்குள் வாயில் ஒருவன் கையை வைத்து அடைத்தான் அப்படியே மூர்ச்சையாகி விழுந்தாள் ஒலிவா.

2-வது அத்தியாயம்.

எட்வர்ட் தெருவிலுள்ள உலக பிரக்யாதி பெற்ற துப்பறியும் ஷம்ஸ் வெஸ்டென்ட் ஹோட்டலின் முன் அறையில் வந்து உட்கார்ந்தார். அங்கு டிக் என்னும் பரிமாறுபவன் “வழமை படி கிரஷ் கொண்டு வரவா ?” என்றான்.

"சரி, கொண்டு வா. ரோஸனை பார்த்தாயா?"

"அவரும் வர நேரமாகி விட்டது. கொஞ்ச நேரத்தில் வருவார்"

"அவரும் நானும் சாப்பாடு இங்கு தான் சாப்பிடப் போகிறோம்"

"நல்லது" என்று சொல்லி டிக் போய் கிரஷ் கொண்டு வந்து ஷம்ஸ் முன் வைத்துச் சென்றான்.

ஷம்ஸ் கிரஷ் குடித்துக் கொண்டு ஏதோ யோசித்துக் கோண்டே யிருந்தார். பின்னால் முதுகை யாரோ தட்டவே, திரும்பி பார்த்தார். "ரோஸன்! உன்னைத் தான் எதிர் பார்த்துக் கொண்டே யிருந்தேன். வா, இங்கு உட்காரு. பின் சாப்பிடலாம். தற்போது சில விஷயம் பேச வேண்டும்" என்றார்.

"உள்ளேயே போய் உட்காரலாம். அவன் சாப்பாடு முன் கொண்டு வந்துவைக்க நேரமாகும். அதற்குள் பேசலாம். என்ன அப்படி முக்கியமான விஷயம்?" என்றார் ரோஸன், பெயர் பெற்ற வக்கீல் ரோஸன் பிளான் & ரோஸன் கம்பெனியின் பங்காளி. இருவரும் ஹோட்டலினுள் போகும் போது ஷம்ஸ்,

"அப்படி முக்கியம் என்று சொல்வதற்குமில்லை. முக்கியமில்லை என்றும் சொல்வதற்கில்லை. ரேனி பர்கைப் பற்றி உங்களுக்கு தெரியுமா?" என்று கேட்டார்.

"பெரிய பணக்காரன். அவனைப் பற்றி கேள்வி பட்டிருக்கிறேன். நேரில் பார்த்து பேசிய பழக்கமில்லை. அவனைப் பற்றி என்ன?"

"அவன் பிரான்ஸி லிருந்து இங்கு வந்து தனது ஊர் திரும்பும் வரை அவனுடனேயே நான் யிருந்து வரவேண்டுமாம். இந்த பாடி கார்ட் வேலை எனக்கு பிடிக்காது. ஆதலால் போக்ஸ்டோனிலுள்ள எனது ஒரு ஏஜென்ட்டிடம் ஏற்பாடு செய்தேன்"

"போக்ஸ்டோனா!"

"ஆம்! இந்த ஏஜென்ட் ஜான் வெஸ்டர்பி, முன்பு போலீஸ் இன்ஸ்பெக்டராக யிருந்தவன். அவன் ஒப்புக் கொண்டு, ரேனி பர்க் இங்கிலாந்தில் இறங்கியதும் சந்திப்பதாக தந்தி சொன்னான். ஆனால் இது 4 நாளைக்கு முன். இன்றுவரை அவனிட மிருந்து ஒரு தகவலும் கிடைக்கவில்லை. அதனால் மனது குழப்பமாக யிருக்கிறது. இந்த ஜான் வெஸ்டர்பி இதற்கு முன் எத்தனையோ விஷயங்களில் எனக்கு ஏஜென்டாக வேலை பார்த்து வந்திருக்கிறான். ஆனால் அப்பொழுது தினசரி தான் செய்து வந்தவைகளை எழுதி யனுப்பும் வழமை யுடையவன்."

"ரேனிபர்க்குக்கு என் [illegible] தேவை. அவன் எதற்கு பயப்படுகிறான்?"

187022

"எனக்கு பிரான்ஸி லிருந்து வந்த கடிதத்தில் சிலர் இவனைப் பிடிப்பதற்காக 2-3 முறை பிரயத்தனம் செய்யப்பட்ட தென்றும், அதனால் தனக்கு பாடி கார்ட் தேவை யென்றும் எழுதி யிருந்தது. எதற்காக அவனைப் பிடிக்க முயற்சிக்கிறார்கள் என்று தெரியாது. ஆனால் தற்போது 4 நாளாக ரேனிபர்க் விஷயமே தெரியவில்லை. கவலையாக யிருக்கிறது. போக்ஸ்டோ னென்றதும் நீ ஆச்சரியப்பட்டது போல் தோன்றியதே. உனக்கும் போக்ஸ்டோனுக்கும் என்ன சம்பந்தம்."

"அதே போக்ஸ்டோனுக்குத்தான், நான் கலியாணம் செய்யப் போகும் பெண்ணும் போயிருக்கிறாள். அவளைப் பற்றியும் ஒன்றும் சமாச்சாரம் கிடைக்கவில்லை"

ஷம்ஸ் இதைக் கேட்டதும் கொஞ்ச நேரம் ஆழ்ந்த யோசனையி லானார். பின்பு ரோஸனைப் பார்த்து சிரித்தார்.

"ஏன் சிறிக்கிறீர். அவள் எனக்கு டைப் வேலை செய்து கொண்டு வரும் ஒலிவா மில்பர்ன். அவளை சாதாரண டைப் வேலை பெண் என்று பரிகாசம் செய்கிறீரோ? அவள் பெரிய நல்ல குடும்பத் தைச் சேர்ந்தவள்"

"நண்பரே! அவள் எந்த குடும்பத்தைச் சேர்ந்தவளா யிருந்தா லென்ன. நல்ல குணமும் அழகுமுடையவளா யிருந்தால் சரி. நல்லது. மிகவும் சந்தோஷம். அதிருக்கட்டும் அவள் எப்பொழுது போக்ஸ்டோன் போனாள்?"

"சென்ற சனிக்கிழமை மாலை புறப்பட்டாள். போய் சேர்ந்ததும் ஞாயிற்றுக் கிழமைக்கே கடிதம் எழுதுவதாக சொல்லிச் சென்றாள். கடிதம் போஸ்டில் தவறி யிருக்கலா மென்று டிரன்க் டெலிபோனில் பேச ஏற்பாடு செய்திருக்கிறேன்."

அச்சமயத்தில் அந்த ஹோட்டலில் வேலை பார்த்து வரும் ஒரு சிறுவன் ஓடி வந்து, ரோஸன் அவர்களுக்கு டிரன்க் டெலிபோன் வந்திருப்பதாக தெரிவித்தான். உடனே ரோஸன் டெலிபோனிருக்கு மிடம் போய் ஒரு நிமிஷத்தில் திரும்பி வந்தார். அவர் முகம் மிகவும் கவலையும் பயமுமுடையதா யிருந்தது. அவர் கைகள் பதறின. இதை யறிந்த ஷம்ஸ் "என்ன? என்ன விஷயம் நேர்ந்தது?"

"ஒலிவா! அவள் அந்த வீட்டிற்கு வரவே யில்லையாம். அவ் வீட்டில் வேலை செய்பவளிடம் தான் தற்போது பேசினேன். வரவே யில்லையாம்.

"அவள் போக்ஸ் டோனுக்குப் போனாளென்று நன்றாகத் தெரியுமா?"

"தெரியுமாவா! சனிக்கிழமை 7¼ மணி டிரெயினில் ஏறிப்போனாள். நான் ஸ்டேஷன் வரை போயிருந்தேன். நாளை மாலை நானும் போக்ஸ்டோன் போய் அவளை சந்தித்து இருவரும் தங்கலா மென்றும் ஏற்பாடு செய்திருந்தோம். போகும் போது எனது வைரமோதிரத்தையும் அவள் கையில் போட்டு அனுப்பினேனே. என்ன நேர்ந்ததோ! போக்ஸ்டோனுக்கு போய் தற்போது நேரே விசாரணை செய்யலா மென்றால், நாளை ஒரு முக்கியமான வேலை யிருக்கிறது. அது முடிந்தபின் தான் போக முடியும். இதற்கிடையில் அவளை பார்க்க முடியுமா? ஏதாவது ஆபத்து நேர்ந்ததா? தெரியவில்லையே"

"தாங்கள் நினைக்கிறபடி ஆபத்து ஒன்றும் நேர்ந்திராது என்று நினைக்கிறேன்"

"ஆபத்து ஒன்றும் நேரிடாவிடில், ஏன் அவ்வீட்டில் சேரவில்லை: கடிதமும் எழுதவில்லை. நாளை என் வேலையை எப்படி கவனிக்க முடியும், எனது எண்ணம் இக்கவலையிலிருக்கும் போது"

"கவலைப்படாதே. நான்கவனித்துக்கொள்கிறேன். அந்தவீட்டின் அட்ரஸை கொடு. நான் போக்ஸ்டோனிலுள்ள எனது ஏஜென்டைப் பற்றி விசாரிக்கும் போது ஒலிவாவைப்பற்றியும் அறிகிறேன்"

"ஷம்ஸ்! நீ அவளைப்பற்றி விஷயம் தெரிந்ததும் தந்திமூலமோ டெலிபோன் மூலமோ உடனே தெரியப்படுத்துங்கள்.

"நல்லது. அப்படியே செய்கிறேன். கவலைபடாதேயும்"

அன்று மாலை 4½ மணிக்கு போக்ஸ்டோன் போலீஸ் ஸ்டேஷனின் முன் ஷம்ஸின் ரோல்ஸ் ராய்ஸ் கார் நின்றது. காரின் முன்புறம் அவரின் அஸிஸ்டென்ட் சோடே உட்கார்ந்திருந்தான். ஷம்ஸ் காரை விட்டிறங்கி போலீஸ் ஸ்டேஷனுள் போனார். இதற்கு முன்பே இவ்விருவரும் ஜான் வெஸ்டர்பி வீட்டிற்கு போய் விசாரித்தார்கள். அவ்வீட்டிலுள்ளவள், வெஸ்டர்பி ரேனிபர்கை சந்திக்கச் சென்றவர் இன்றுவரை வீடுதிரும்ப வில்லை என்பதாக தெரிவித்தாள்.

போலீஸ் ஸ்டேஷனிலிருந்து திரும்பிவரும் ஷம்ஸைப் பார்த்து "ஏதாவது சமாச்சாரம் கிடைத்ததா?" என்று சோடே கேட்டான்.

"இங்கு ஒரு கான்ஸ்டேபிளுக்கு ஜான் வெஸ்டர்பி தெரியுமாம். இங்கு ரேனிபர்க் வந்திருக்கவேண்டிய இரவு, இவன் வெஸ்டர்பியைப் பார்த்தானும். சான்ட் பீச் ஸ்ட்ரீட்டில் ட்ரைடே லாட்ஜ்ஜுக்கு முன்பு நின்று கொண்டிருந்தானும்."

"நீங்கள் தற்போது வெஸ்டர்பியை விசாரிக்கப் போகிறீர்களா? அல்லது ஒலிவா விஷயமா?" என்று சோடே கேட்டான்.

"ஒலிவாவுக்கு என்ன நேர்ந்திருக்கும்? ஒன்றும் பிரமாதமாக யிருக்கும் என்று நினைக்கவில்லை. தற்போது ஸான்ட் பீச் ரோட்டுக்கு போகலாம்"

சோடே காரை ஒட்டிக்கொண்டு, சில நிமிஷங்களில் சான்ட் பீச் ரோட்டுக்குபோய் சேர்ந்து, ட்ரைடேலாட்ஜைத் தேடினார்கள். அந்தவீடு ஒரு பழையதாகவும் ஒருமைதானத்தின் நடுவிலிருப்பதாகவும் கவனித்தார்கள் அத்தெருவில் ஜனநடமாட்டமும் அதிகமாகயில்லை. அவ் வீட்டின் வெளியிலிருந்து ஒருவன் அவ்வீட்டின் ஜன்னல் களைக் கூர்ந்து கவனித்தவாறு நின்று கொண்டிருந்தான். கார் வீட்டின் முன் நின்றதும், பகலிலே வீட்டினுள் விளக்குகளெல்லாம் எறிந்து கொண்டிருப்பதைக் கவனித்து ஷம்ஸும் ஆச்சரியப்பட்டார்.

ஷம்ஸும் சோடேவும் காரைவிட்டிறங்கி வீட்டி னருகே சென்றனர். இவர்களைப் பார்த்த அங்கு நின்றவன் "நான் இத்தெருவழியாக தினம் இருமுறை செல்கிறேன். சென்ற ஒரு வாரமாக இவ் வீட்டில் இவ்வாறுதான் விளக்குகள் எறிகின்றன" என்றான்.

"என்ன? ஒரு வாரமாக இவ்வாறு? நன்றாக யோசித்து சொல்" என்று ஷம்ஸ் கேட்க, அவனும் தலையில் கையைத்தேய்த்துக் கொண்டே யோசித்தான். பின்பு "4 நாட்களாகத்தான். சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலையிலிருந்துதான்" என்றான்.

இதைக் கேட்டதும் ஷம்ஸ் யோசித்தார். "எதற்கு 4 நாட்களாக விளக்கு எரிய வேண்டும்? இவ்வீட்டில் யாருமில்லையோ! போகும் போது விளக்கை மறந்து யிருக்கக் கூடும்" என்று நினைத்தார்.

இதற்கிடையில் அம்மனிதன் "அவ்வீட்டுக்காரனுக்கு பண திமிர் அதிகம் போல் தெரிகிறது. இல்லாவிடில் என் 4 நாட்களாக விளக்குகளை பகலிலும் ஏற்றிவைக்கிறான். நமக்கென்ன? எனக்கு நேர மாகிறது நான் வீட்டிற்கு போகிறேன்" என்று சொன்னான்.

"இங்கு யார் வசிக்கிறாரென்று தெரியுமா" வென்று கேட்க, "நான் இந்த பக்கம் வந்தே கொஞ்ச நாட்கள்தான் ஆகின்றன. எனக்கு தெரியாது" என்று சொல்லிபோய் விட்டான்.

ஷம்ஸ் அவ்வீட்டை வெளியிலிருந்தே கவனித்தார். அவ் வீட்டில் யாரும் வசிப்பதாக தெரியவில்லை. விளக்குகள் எரிகிறதே தவிர வேறு வீட்டினுள் சப்தம் ஒன்றும் கிடையாது.

"நாம் கதவைத்தட்டிபார்க்கலாமே. யாராவது கதவைத்திறந் தாலும், விளக்குகள் பகலில் எரிவதைசாக்கு சொல்லலாம்" என்றான் சோடோ. இதற்கிடையில் ஷம்ஸ் வீட்டின் முன்னால் யிருந்த பூச் செடிகளுள்ள நிலத்தைக் கவனித்தார். அங்கு ஏதோ ஒரு கார் வந்து

திரும்பிபோனதாக அடையாளம் தெரிந்தது. திரும்பும்போது புஷ்ப செடிகள் சிலதை தள்ளி நசுக்கியதாக தெரிந்தது.

ஷம்ஸு வீட்டின் வாயலண்டை போய் கதவைத்தட்டினர். பதிலில்லை. மறுமுறையும் தட்டினர். பதிலில்லை. எலக்ட்ரிக் மணியின் ஸ்விட்ச் யிருந்தது. அதையும் அமிழ்த்தினர். உள்ளுக்கு மணி அடிக்கும் சப்தத்தைத்தவிர வேறு ஒன்றும் கேட்கவில்லை. “பின்புறம் வழியைப் பார்க்கலாம்” என்று சொல்லி, ஷம்ஸ் பின்புறம் போனர். பின்வழி திறக்கப்பட்டிருந்தது. ஆனால் பக்கத்தில் சுவரிலுள்ள ஒரு ஜன்னலி னருகே வந்சதும் “வெஸ்டர்பி இவ்வழியாக இவ்வீட்டினுள் போனவன், இவ்வழியாக திரும்பவில்லைபோல் தெரிகிறது” என்று சொல்லி, அந்த ஜன்னலின் கீழே ஒரு காலடிதெரிவதைக் காண்பித்தார். வெஸ்டர்பிக்கு பெரியபாதம். அவன் எப்பொழுதும் 10 நீ பூட்ஸுதான் போடுவான். ஜன்னலினருகே தெரிந்த காலடியும் 10 நீபூட்ஸினுல் ஏற்பட்டதாக தெரிந்தது. இன்னொரு காலடிமிகவும் அழுந்தியதாக தெரிந்தது. ஒரு காலைத்தூக்கி ஜன்னலினுள் ஏறும்போது மற்றொறுகால் மிக அழுந்தியதாகதெரிந்தது.

“முன் வழியாக போகாமல் ஜன்னல் வழியாக வெஸ்டர்பி நுழைந்ததைக் கவனித்தால், அவனை யறியாமல் ஏதோ இவ்வீட்டில் நடந்ததாயும் அதை அறிவதற்கு ஜன்னல் வழியாக போனதாகவும் தெரிகிறது” என்றார் ஷம்ஸ்.

இருவரும் அவ்வழியே போய் பின்னுலுள்ள சமையலறையில் நின்றார்கள். வேறு சப்தமே கிடையாது. அங்கிருந்து ஹாலுக்கு வந்தார்கள். அந்த ஹாலைப்பார்த்ததும் ஒரு பெரிய பணக்காரன் வசிக்கும் இடமாகத் தோன்றியது. அந்த ஹாலிலுள்ள சாமான் களெல்லாம் விலையுயர்ந்தவையாயிருந்தன. வலது புறம் ஒரு அறை கதவு திறக்கப்பட்டிருந்தது. அதனுள் நுழைந்துபார்க்க அதுமிக பெரிய அறையாகவும் அதில்அநேக விலையுயர்ந்தநாற்காலிகளும் ஒரு பியானேவுமிருந்தன. இந்த அறையைப் போல் எதிரில் இன்னொரு சாப்பாட்டு அறையுமிருந்தது. அங்கிருந்து மெத்தைக்குப் போய் பார்த்தனர். அங்கும் படுக்கை யறைகள் விலையுயர்ந்த கட்டில் களுடனிருந்தன. இவர்கள் கடைசியாக மாடியில் முன்னுலுள்ள அறையை கவனித்தார்கள். அந்த அறையில் அநேக விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. அச்சமயத்தில் தெருவில் ஒரு பெரிய லாரி வேகமாக ஓடியது. அந்நேரத்தில் சோடே அந்த அறையிள்ள ஒரு பீரோ (அல்மாரி)யைக்காண்பித்து “அதில் யாரோ ஒளித்துக்கொண்டிருப்பதாக தொரிகிறது” என்றான். “அவ்வாறிராது. லாரி தெருவில் ஓடியதால் அந்த அதிர்ச்சியினல் இந்த பீரோவின் கதவு அடியிருக்கலாம்” என்று ஷம்ஸ் சொல்லிக் கொண்டே அந்த பீரோவினருகே

போய் கதவை இழுத்தார். பூட்டப்பட்டிருந்தது. உடனே தனது கோட்ஜேபியிலிருந்து ஒரு ஆயுதத்தை எடுத்து அந்த பீரோவில் சாவி போடுமிடத்தில் போட்டு கொஞ்ச நேரம் இருபக்கமும் திருப்பினர். கடக் என்று திரும்பியது. கதவை உள்ளிருந்து யாரோ தள்ளுவது போல் வேகமாக திறந்தது. அத்துடன் உள்ளிருந்து ஒரு மனிதன் முன்னின்ற ஷம்ஸின் கையில் சரிந்து விழுந்தான். ஷம்ஸுக்கு என்னகல்நெஞ்சோ! கையில் விழுந்த உருவத்தின் முகத்தை கொஞ்சமும் பயப்படாமல் கவனித்தார். ஜான் வெஸ்டர்பி! உடம்பு விறைத்துக் கொண்டிருந்ததைத் தெரிந்தார். தனது ஏஜென்ட்டை கொலை செய்ததை யறிந்ததும் தன்னை யறியாமல் கோபம் பொங்கியது.

"சோடே! இவ்வாறு செய்தவனை விடப்போவதில்லை, அவனைப் பிடிக்கா விட்டால் என்பெயர் ஷம்ஸ் அல்ல" என்று பல்லை கடித்துக் கொண்டு ரோஷத்துடன் கூறினர். அந்த பிணத்தின் தோளில் குத்தப்பட்டிருக்கும் கத்தியைக்காண்பித்து "பாவிகள் கொலை செய்து விட்டார்கள்" என்ருர். (தொடரும்.)

தயாராகி விட்டது! தயாராகி விட்டது!!

பாஸோவின் மர்மம்

இது ஒரு அருமையான துப்பறியும் கதை. இதில் ஒரு பாங்கிலுள்ள நோட்டுகளை எடுத்து பகரமாக பொய் நோட்டுகளை வைக்க சிலர் எத்தனித்ததையும் அது கைகூடா வண்ணம் செய்து அவர்களின் திருட்டு யோசனைகளை வெளியாக்கிய துப்பறியும் ஷம்ஸின் செயல்களும் விளக்கப்பட்டுள்ளது.

இதன் விலை அணு. 8

தேவையுள்ளோர் 9 அணு. ஸ்டாம்பு அனுப்பி வைத்தால் புக்போஸ்ட் மூலம் அனுப்பப்படும். சந்தாதாரர் 7 அணு. ஸ்டாம்பு அனுப்பினல் போதும்.

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

மைசூர் பாக் செய்வது.

கடலை மாவு 1 ஆழக்கு, சர்க்கரை $1\frac{1}{2}$ ஆழாக்கு, நெய் 1 ஆழாக்கு.

இரும்பு கடாயில் நெய்யை விட்டு கொதிக்க வைக்கவும். நன்றாக கொதிக்கும்போது கடலை மாவை அதில் கொட்டி நன்றாக கிளரவும். அப்போது மாவு கொஞ்சம் வெந்து, ஒரு விதமான வாசனை வரும். அச்சமயத்தில் கீழ்கண்டதை கலக்கவும்.

$\frac{1}{4}$ அழாக்கு தண்ணீரில் கொஞ்சம் உப்பும், கொஞ்சம் ஆப்பம் சோடா மாவும் போட்டு கறைத்து அதை $1\frac{1}{2}$ ஆழாக்கு சர்க்கரை ஊற்றி கிளரி வைக்கவும். இதை மேல் குறித்த கடலை மாவில் வாசனை வரும் சமயம் ஊற்றி கிளரவும். விடாமல கிளரவும். தீ கொஞ்சமாக யிருக்க வேண்டும். எல்லாம் சேர்ந்து கட்டியாகும் தருணத்தில் இறக்கி ஒரு பாத்திரத்தில் ஊற்றி தேவைபடும் அளவு துண்டுகளாக அறுத்துக் கொள்ளவும். ருசியுள்ள மைசூர்பாக் தயாராகி விட்டது.

ஷரீபத்து யாஸீனும் துஆவும்.

யாஸீன் ஸூராவுடைய அரபு ஆயத்துகளைத் தமிழ் எழுத்தைக் கொண்டு திருத்தமாய் ஓதும்படியான அமைப்புகளுடையதாகும் இந்தக் கிதாபு. இதில் பெரிய துஆவும், பாத்திஹா ஓதவேண்டிய தர்த்தீபுகளும், ஒவ்வொரு விஷயத்திற்கும் ஓதவேண்டிய துஆக்களும் தல்கீனும் அதன் தர்ஜுமாவும் சேர்த்து அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அணா. 7

அறபு யாஸீன் விலை அணா 2. அறபு யாஸீன் அஸ்மாவுல் இலாமுடன் விலை அணா. 3

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

விகடத் துண்டுகள்.

கார் மெக்கானிக் கார் சொந்தக்காரரிடம்: நான் கவலை இல்லாமல் சொல்லுவேன் இந்தக்காரில் பணத்தைக் கொண்டு சரி செய்ய முடியாத படியாக ஒரு தொந்தரவும் கிடையாது.

தகப்பனர் (நண்பரிடம்): என் பையன் ஜெயிலில் நல்ல நடவடிக்கையுடன் இருந்ததால் அவனுடைய தண்டனையில் 6-மாதம் குறைத்து விட்டார்களாம்.

நண்பர்: அந்த மாதிரி பிள்ளை கிடைக்கணுமே.

ஹோட்டலில் சாப்பிட சென்ற ஒருவர் அங்கு வெள்ளை கோதுமை ரொட்டிக்கு ஆர்டர் செய்தார். ஆனால் கருப்பு கோதுமை ரொட்டி தான் வைக்கப்பட்டது. அதை தின்று விட்டு சென்றார். மறுநாளும் இவ்வாறே ஆயிற்று. இவ்வாறு ஒருவாரம் சென்றது. தனக்கு வேண்டிய வெள்ளை கோதுமை ரொட்டி வேண்டுமானால் ஒரு சமயம் மாற்றி கேட்டால் கிடைக்குமென நினைத்து கருப்பு கோதுமை ரொட்டி கேட்டார். அதற்கு சர்வர் "நீங்கள் வெள்ளை கோதுமை தானே சாப்பிடுவது வழக்கம்."

லாயராக முதல் முதலாக ஒரு கேஸில் பேச போகும் ஒருவரிடம் அனுபோகமான லாயர் ஒருவர், "நீங்கள் ஜூரிகளிடம் பேசும்போது ஜூரிகளில் அறிவாளியைப் போல இருப்பவரையே நோக்கி பேச வேண்டும்" என்றார். ஆகையால் புதுலாயர் தனது முதல்கேஸில் ஜூரிகளில் யாவரையும் விட அறிவாளியைப் போல தோன்றிய ஜூரியை நோக்கியே தனது பேச்சுகளை குறித்து பேசினர். எல்லாம் ஒழுங்காக சென்றது. ஜூரிகள் தங்கள் அறைக்கு ஆலோசிக்க செல்லும் முன் அறிவாளியாக தோன்றிய ஜூரி ஜட்ஜிடம், "எனக்கு இந்த லாயர் பேசியவைகளில் இரண்டுவார்த்தைக்கு அர்த்தம் தெரியவில்லை" என்றார். லாயர் தான் பேசியவைகளில் ஏதோ அர்த்தம் அறிந்து கொள்ள கஷ்டமான வார்த்தைகள் இரண்டு உபயோகித்து விட்டோமோ என கவலையுடன் முன்நோக்கினர். **அறிவாளியாக தோன்றிய ஜூரி:** அந்த இரண்டு வார்த்தைகளும் வாதி, பிரதி வாதி.

Edited by M. S ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

187022

முரீது உபதேசம்.

இதில் அடங்கி உள்ள விஷயங்களாவன :—உண்மை பகீர்கள் யார்? இராதத்—முரீத்—முருதத் விபரம், முரீத் என்பவர் யார்? தஸவ்வுப் விபரம், முரீதின் ஆரம்ப நிலை, ஷேக் சன்னிதானத்தில் முரீதின் மரியாதை, முரீதுக்கு ஷைக் ஆதரவு, சமா என்னும் புகழ் பாடக்கச்சேரி விபரம், முரீதுக்கு பீர்ஸாஹிப்பிடம் இருக்க வேண்டிய பயபக்தி, முரீதுக்கு ஷைக் ஸாஹிபின் உபதேசப் பயிற்சி விதம், சகோதர வாஞ்சையும் ஏனைய பழக்க உபசாரங்களும், அந்நியர் சேர்க்கை, செல்வந்தர் சேர்க்கை, பகீர்களுடன் சேர்க்கை வைத்தல், பகீர் சாஹிபின் எளிமைச் சிறப்பு, பகீரும் சுவால் செய்தலும், பகீர் சுகானுபவ ஒழுக்கம், பகீர் சாப்பாட்டு ஒழுக்கங்கள், தோழருடன் உபசார முறை, பிள்ளை குட்டிகளுடன் பகீரின் பழக்காசார முறை, பிரயாணத்தில் பகீர்கள் எவ்வாறு ஒழுக வேண்டும், பகீர் சாஹிபு இராகம் செவியுறுதல், முஜாஹிதா (தவப்பரயுத்தம்) விபரம், முஜாஹிதாவின் தாத்பரியம், முஜாஹிதாவை பூர்த்திக்கும் அம்சங்கள், ஆண்டவன் மஃரிபத், ஷைத்தானைப் பற்றிய எச்சரிக்கை, நப்ஸ் எச்சரிக்கை, ஆண்டவன் பயபக்தி, மஹான்களின் பழக்க ஆசாரங்கள், தவக்கல் என்னும் நம்பிக்கை, நற்குண சிலங்கள், ஆண்டவன் சந்நிதானத்தில் நன்னடத்தை, ஷுக்ரு (நன்றி) விபரம், ஸப்று விளக்கம், ரிஜா (சம்மதம்) உண்மை விளக்கம், பரிசுத்தம், தௌபாச் செய்தல் இராக் கால வணக்கம், நபி பெருமானாரின் இராத் தொழுகை, தனிமையில் உபதேசித்தல், உபதேச ஷாத்துகள், நப்ஸூம் ஆத்மாவும், தங்கள் ரியாஜத், குத்பு நாயகத்தின் துஆ, மதக்கல்வி முதலியவைகளை விரிவாய் விபரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு முஸ்லிமும் இப்புத்தகத்தை வாங்கி படித்து பிரயோஜன மடைவது அத்தியாவசியம்.

இதன் விலை ரூபா. 1-8-0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹூல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹூல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ். 5

காஜா முயீனுத்தீன் சிஷ்தீ அஜ்மீரி (றலி) அவர்களின் ஜீவிய சரித்திரம்.

இதில் காஜா முயீனுத்தீன் சிஷ்தி (றலி) அவர்கள் அவதரித்ததும், இளம் வயதிலேயே இப்றுஹீம் கந்தூஸி என்னும் மஹானை சந்தித்து அதனால் அவர்கள் மனம் மஃரிபத் ஒளிவால் நிரப்ப மடைந்ததும் பின்னர் காஜா உஸ்மான் ஹாரூனி (றஹ்) அவர்களிடம் சென்று உபதேசம் பெற்றதும் பின்பு மக்கத்துக்குச் சென்றதும், பின் பக்தாத் ஷரீப் வந்து ஹஸ்ரத் கவ்துல் அஃலம் (கத்த) அவர்கள் சமுகத்திலிருந்ததும், பஷர்வார் நகருக்குப் போய் ஒரு துர்க்குணமுள்ள கொடியனை நல்வழியிலாக்கினதும், பின்பு பலக் எனும் ஊரில், தஸவ்வுப் என்னும் மெய்ஞ்ஞானத்தில் விசுவாச மில்லாத ஒரு வைத்தியரின் உள்ளத்தில் மஃரிபத் என்னும் மெஞ்ஞான ஒளி பிரகாசிக்க செய்ததும், தீப்பூசகர்களை இஸ்லாத்தி லாக்கியதும், காபிரான ஒரு கொள்ளைக் கூட்டத்தை இஸ்லாமைத் தழுவச் செய்ததும், பிறகு மதீனா ஷரீபுக்குப் போய் ஸியாரத்து செய்ததும், அங்கிருந்து நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உத்திரவுபடி அஜ்மீர் வந்ததும், அங்கே நடத்திய கராமாத்துகளும்; அவர்களின் திருமணமும் அவ்லாதுகளும், அவர்கள் வபாத்தும் விபரித்துள்ளன." இம்மஹானின் சரிதையை ஒவ்வொருவரும் வாசித்தறிய வேண்டியது அத்தியாவசியம். இதன் விலை அணா 8

ஹீரத்துல் பாறூக்.

இதாகிறது நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுண்டைய இரண்டாவது கலீபாவாகிய உமர் இப்னுல் கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சரித்திரம்.

இதில் அவர்களுடைய பிரபல்யங்களும், கீர்த்திகளும், வீரியங்களும், யுத்த சாமார்த்தியங்களும், தீனில் வழுவாது நடக்கும் நீதிகளும், அடங்கி யிருக்கின்றன. எல்லா முஸ்லிம்களுக்கும் அவர்களுடைய மகிமை புலப்பட்டிருப்பதால் நாமதை இங்கு விரித்தெழுதவில்லை. இச் சரித்திரம் வாசிக்க வாசிக்க ஆனந்தத்தையும் ஆச்சரியத்தையும் உண்டாக்கு மென்பதில் ஐயமில்லை. இது இரண்டு பாகமாகும். முதற் பாகத்தில் அவர்களுடைய சரித்திரங்களும், இரண்டாம் பாகத்தில் அவர்களுடைய நீதிகளும் அடங்கி யிருக்கின்றன. இரண்டு பாகமும் சேர்ந்தது. இதன் விலை ரூ. 3

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்.

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.